₹10

fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 3 | March 2021



## என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்.

– இயேசு (யோவான் 14:14)

# கிறிஸ்தவ ஜெபத்தின் தனித்துவம்!

# ஆரம்ப வரிகள்...



கிறிஸ்தவ ஜெபம், உலகிலுள்ள மற்ற சமய மரபுகளைக் காட்டிலும் தனித்துவமானதும், வேறுபட்டதுமாகும். ஏனெனில், கிறிஸ்தவ ஜெபம் – ஒரு தனிப்பட்ட மனிதனின் பரிசுத்தத்தையோ அல்லது வல்லமையையோ அடிப்படையாகக் கொண்டதல்ல; மந்திர, தந்திர, மாயஜால மற்றும் கடுமையான தியானப்பயிற்சியைச் சார்ந்ததோ அல்ல; நமது சொந்த தேவைகளுக்கான வேண்டுதலை மட்டும் அடிப்படையாகக் கொண்டதுமல்ல; தேவனுக்கு எந்த நலனையும் சேரச்செய்வதற்கானதுமல்ல; தேவனுடன் பேரம்பேசுதல், கோரிக்கை வைத்தல், தேவவல்லமையையே கட்டுப்படுத்துதல் போன்றதுமல்ல; துன்பமற்ற வாழ்விற்கான உத்தரவாதம் அளிப்பதுமல்ல மற்றும் ஒருவரது பக்தியை வெளிக்காட்டுவதற்கான அம்சமுமல்ல.

மாறாக ***கிறிஸ்தவ ஜெபம்,***

- **தேவனோடுள்ள ஒரு நெருங்கிய பந்தம்;** தேவனுடனான ஒரு அந்தரங்க சந்திப்பு; தேவபிரசன்னத்தை அனுபவிப்பதற்கான ஒரு பாக்கியமாகும்.
- **நம்மை மாற்றுகிறது.** நாம் தேவனோடு செலவிடுகிற நேரத்தில், நமது இருதயத்தைத் தேவன் அவரது இருதயத்தைப் போலவே மாற்றுகிறார். நாம் எவ்வளவு நேரம் அவரோடு ஜெபத்தில் செலவிடுகிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அவரைப் போலாவோம்.
- **நமது சுயநலத்தைக் கட்டுப்படுத்துகிறது.** ஜெபத்தின் மூலம் தேவசித்தத்தை நமது விருப்பத்திற் கேற்ப மாற்ற முடியாது; மாறாக, தேவசித்தத்திற்கு உகந்தவர்களாக நாம் மாறலாம். ஜெபத்தின் மூலம் நாம் தேவனின் சிந்தையோடு ஒருங்கிணைக்கப்படுகிறோம் என்பதே உண்மை.
- **நமக்கு வல்லமையைத் தருகிறது.** நமது இவ்வுலகப் போராட்டங்களில் நாம் தனிமையாக இல்லை; தேவன் நம்முடன் இருக்கிறார் என்பதையே நமது ஜெபம் உணர்த்துகிறது. அதனால், நாம் தேவனுடைய வழிநடத்துதலுக்குள்ளாகி, விசுவாசத்தில் வல்லவர்களாவோம்.
- **நமக்கு நம்பிக்கையைத் தருகிறது.** நாம் தேவனை விசுவாசிக்கும்போது, நமது வாழ்வின் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியும் என்கிற உறுதிப்பாட்டைப் பெறுகிறோம்.
- **நமது ஆவிக்குரிய கண்களைத் திறக்கிறது;** அதனால், நாம் தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளைப் பார்ப்பதற்கும், அவைகளை வாழ்வில் அனுபவிப்பதற்கும் உரியவர்களாகிறோம் (2இராஜா.6:15-17).
- **நம்மை முன்னோக்கி வழிநடத்துகிறது.** தேவன் தமது கிரியைகளை நமது ஊழியத்தில் நடப்பிக்கவும், நாம் அப்பலனை அடையவும், தேவராஜ்யத்தை விரிவுப்படுத்தவும் நம்மை உந்தித் தள்ளுகிறது.
- **ஆத்துமபாரத்தை நமது அகத்தினில் உருவாக்குகிறது;** அதனால், நாம் ஆத்தும ஆதாயப்பணியில் கிறிஸ்துவோடு பங்குதாரர்களாகிறோம்.
- **மற்றவர்களுக்குப் புதுவாழ்வை அளிக்கிறது.** அதாவது, மற்றவர்களுடைய மனதிலும் உலகப்பார்வையிலும் அது பெரியதொரு மாற்றத்தை உருவாக்கி, அவர்களுக்கு நல் நம்பிக்கையையும் தீர்மானங்களை மேற்கொள்வதில் தெளிவையும் அளிக்கிறது.

நமது ஜெபம், மற்ற சமய வழக்கங்களைக் காட்டிலும் தனித்துவமும், மாற்றமும் நிறைந்ததாகக் காணப்படுகிறதா? நமது ஜெபஜீவியத்தில் வளர்ச்சிக் காணப்படுகிறதா? இன்றைய “கிறிஸ்தவ வாழ்க்கையின் மிகப்பெரிய சோகம் – பதிலளிக்கப்படாத ஜெபம் அல்ல, ஏறெடுக்கப்படாத ஜெபமே” என்று F.B. மேயர் என்கிற வேதப்பண்டிதர் கூறுகிறார். எனவே, நம்முடைய ஜெபம் தனித்துவம் நிறைந்ததாகவும், நமது ஆவிக்குரிய வாழ்வின் உயிர்மூச்சாகவும் அமையட்டுமே!

- JJ. ஹாரிஸ் *(தகவல் தொடர்பு துறை)*

**“அடிக்கடி ஜெபித்துக் கொண்டேயிருங்கள்; ஏனென்றால், ஜெபம் நமது ஆத்துமாவிற்கு ஒரு கேடகம், தேவனுக்கு ஓர் சுகந்த வாசனை, சாத்தானுக்கோ அது ஒரு கசையடி.” - ஜாண் பனியன்**

**“ஜெபம் நம்மைத் தேவநோக்கங்களுடன் இணைத்து சீரமைக்கிறது.” - E. ஸ்டேன்லி ஜோன்ஸ்**

**“நீங்கள் நூறாண்டுகள் வாழவிருப்பதுபோல் திட்டமிட்டு வேலை செய்யுங்கள்; ஆனால், நாளையே உங்கள் இறுதிநாள் என்பதுபோல் ஜெபியுங்கள்.” - பெஞ்சமின் ஃபிராங்க்ளின்.**

**“வார்த்தை உச்சரிப்பின்றி வியாகுலப் பெருமூச்சுகளோடு ஏறெடுக்கப்படும் ஜெபமானது, பெரும்பாலும் தேவனால் மறுக்கமுடியாத ஒன்றாகி விடும்.” - சார்லஸ் ஸ்பர்ஜன்**

**“ஒவ்வொரு பெரும் கிறிஸ்தவ சாதனைக்குப் பின்னால் இருப்பது, ஓர் பதிலளிக்கப்பட்ட ஜெப சரித்திரமே.” - ஈ.எம். பௌண்ட்ஸ்**

**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபேசியர் 6:18)**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**

பொதுச் செயலாளர்:
S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுகாரியதரிசியிடமிருந்து...

அன்பிற்குரிய பெரியோரே, சகோதர, சகோதரிகளே மற்றும் சிறார்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

**ஜெபம் என்பது மிகுந்த பலனும் பொறுப்பும் நிறைந்ததாகும்.**

ஜெபம் மிகவும் பலன் நிறைந்தது; ஏனெனில், இதனால் நாம் தேவனை நேரடியாக அணுகும் பாக்கியத்தைப் பெறுகிறோம். மேலும் இது நம்மைத் தேவனுக்கு முன்பாக ஆசாரியர்களாகவும், பரிசுத்த ஜாதியாகவும், (யாத்.19:6) பிரித்தெடுக்கப்பட்டவர்களாகவும், மற்றவர்களுக்குக் காவலாளனாகவும் நிறுத்துகிறது. இதன் மூலம் தேவனுடைய அனைத்து சிருஷ்டிகளுக்காகவும் நாம் அவருக்கு முன்பாக நிற்கும் பேறு பெறுகிறோம்.

ஜெபம் மிகவும் பொறுப்பு நிறைந்தது; ஏனெனில், நமது ஜெபத்தின் மூலம் தேவன் செயல்படத் தயாராக இருக்கிறார். ஆனால் நாம் அதைச் செய்யத் தவறும்போது, தேசத்தின் மீட்பிற்கான அனைத்து தேவைகளிலும் தேவன் தலையிடும் சிலாக்கியத்தை நாம் இழக்கிறவர்களாகிறோம்.

தேவன் எல்லாவற்றையும் அறிந்திருப்பவராயினும், நமது தேவைகளை நாம் அவரிடம் சொல்ல வேண்டுமென அவர் ஏன் விரும்புகிறார்? ஜெபத்தை நாம் ஒரு சடங்காச்சாரமாகக் கடைபிடிக்க தேவன் விரும்புகிறாரா? தேவன் தாம் செயல்படுவதற்கு நாம் இரவும் பகலும் அவருக்கு முன் கூக்குரலிட வேண்டுமென்ற கடினமனதுடன் காணப்படுகிறாரா? இந்தக் கேள்விகளுக்கான பதில் என்னவென்றால், தேவன் தகுதியற்ற நம்மையும் மதித்து, தாம் செய்யவிருக்கிற மகத்தான கிரியைகளில் நம்மையும் நமது ஜெபத்தின் மூலம் ஈடுபடுத்த விரும்புகிறார் என்பதே. சோதோம் கொமோராவிலுள்ள ஜனங்களைத் தண்டிக்க தேவன் முற்பட்டபோது, "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?'' இல்லை, நான் அவனுக்கு மறைப்பதில்லை; ஏனெனில் நான் அவனை அறிந்திருக்கிறேன், (ஆதி.18:17-19) என்று கூறுகிறார். ஆகவே, ஜெபத்தை நாம் ஒரு சடங்காச்சாரமாகவோ அல்லது ஒரு

சாதாரண செயல்பாடாகவோ குறைத்து மதிப்பிடக் கூடாது. அதற்கு மாறாக நம்முடைய ஜெபமானது, நடக்கப் போகிற ஏதோ ஒரு அழிவின் சம்ப வத்தை முன்னதாக தேவன் நமக்கு வெளிப்படுத்தும்போது, அதை வெறுமனே பார்க்கிற பார்வையாளர்களாக மாத்திரம் அது நம்மை இருந்துவிடச் செய்யாமல், அந்த அழிவை மாற்றிப்போடுவதற்காக நம்மைத் திறப்பின் வாசலில் மக்களின் பிரதிநிதிகளாகத் தேவனுக்கு முன்பாக நிற்கக்கூடிய ஆசாரியர்களாகவும், பிறருக்கு முன்பாகத் தேவனுக்காக நிற்கக்கூடிய தேவபிரதிநிதிகளாகவும் உருவாக்குகின்ற ஓர் வைராக்கிய செயலாக இருக்க வேண்டும்.

## புதிய பொதுச்செயலாளர்:

இந்த 2021-ம் வருடம் மார்ச் மாதத் தோடு எனது ஐந்தாண்டுக்கால பொறுப்பு முடிவடைவதினால், நமது இயக்கத்தின் நிர்வாகக்குழு, அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களைப் புதிய பொதுச்செயலாளராக நியமித்துள்ளது. அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள் ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள மால்தோ இன மக்கள் மத்தியில் பல ஆண்டுகளாக ஊழியம் செய்தவர் மட்டுமல்லாமல், நமது தலைமை செயலகத்திலும் சில ஆண்டுகள் நிதித்துறை மற்றும் தகவல் தொடர்புத்துறைகளிலும் பணி புரிந்த முதிர்ந்த அனுபவம் கொண்டவர். இவர் வணிகவியலில் இளங்கலைப் பட்டப்படிப்பும் (B.Com.,), நிதி நிர்வாகத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பும் (MBA.,) பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவர் நாக்பூரை மையமாக வைத்து நமது அனைத்து பணித்தள ஊழியங்களுக்கும் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். இந்த 2021 மார்ச் மாதத்தில் நமது பொதுச்செயலாளராகப் புதிதாகப் பொறுப்பேற்க இருக்கிற இவரையும், இவரது குடும்பத்தினரையும் தங்களது ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள்.

## ஜெபத்திற்கான அணித்திரட்டல்:

தங்களில் பெரும்பாலானோர் அறிந் திருக்கிறபடி, இந்த லெந்து காலங்களில் நாம் நமது நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் ஆதரவாளர்களாக 1000 மணிநேர ஜெப ஒழுங்குகளைப் பல இடங்களிலுள்ள நமது ஜெபக்குழுக் களில் பலவிதங்களில் கடைபிடிக்க ஏற்பாடு செய்துவருகிறோம். தங்களது இடங்களிலும் இப்படிப்பட்ட ஜெபஒழுங்கு களைத் திட்டமிட்டு நடத்துவதற்குத் தாங்கள் விரும்பினால், அதற்கு எங்களது உதவியேதேனும் தேவைப் பட்டால், எங்களைத் தொடர்புக் கொள்ளுமாறு தங்களைப் பட்சமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

கிறிஸ்துவின் பணியில்



S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

# ஜெபத்தின் மேன்மை

சகோ. மா. பேட்ரிக் ஜாஷ்வா



"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்." – யாத்.19:5,6

"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்." – 1 பேதுரு 2:9

✦ முதலாவது நம்மை ஆண்டவர் பரிந்து பேசுபவர்களாகத் (ஆசாரியர்களாக) தெரிந்துள்ளார்.

✦ இரண்டாவது நம்மைப் பரிசுத்தமாய் வாழ்பவர்களாகத் (பரிசுத்த ஜனமாய்) தெரிந்துள்ளார்.

## 1. ஜெபத்தினால் எழுப்புதல் உருவாகும்:

சேர்ந்து, இணைந்து, ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது நான்கு காரியங்கள் நிகழ்கின்றது.

1. ஜெப ஆவி ஊற்றப்படுகின்றது.
2. ஒற்றுமையின் ஆவி / ஆவியின் ஒருமைப்பாடு காக்கப்படுகின்றது.
3. விசுவாசம் வளர்கின்றது அல்லது பெருகுகின்றது.
4. தேவ வல்லமை வெளிப்படுகின்றது.

மேலே கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் தொடர்ந்து எழுப்புதலாக உருவாகிறது. இதுதான் ஜெபத்தின் முக்கிய மேன்மை.

## 2. ஜெபத்தினால் கூடாத காரியங்கள் கூடும்:

ஹிரன்பூர் தாலுகாவில் உள்ள **எஸ்றா மால்டோவின்** 7 நாட்கள் உபவாச ஜெபத்தினால் 60-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சபைகள் நிறுவப்பட்டன; **சண்டோலா கிராமத்தில்** காலங்காலமாக செலுத்தப்பட்ட நரபலி நிறுத்தப்பட்டது; மக்கள் மனந்திரும்பி, கிறிஸ்துவை ஆராதிக்கிறார்கள். மாறாத காரியங்கள், கூடாத காரியங்கள் ஜெபத்தினால் கூடும். மேலும் ஜாண் ஹைடின் ஜெபத்தின் மூலம் பஞ்சாபில் எழுப்புதல் வந்தது.

### 3. ஜெபத்தினால் மாறாத குணங்கள் மாறும்:

நாம் ஜெபத்துடன் தேவனிடத்தில் உதவியை நாடும்போது நம்முடைய மாறாத குணங்கள், கெட்ட பழக்க வழக்கங்கள், கசப்புகள் எல்லாம் மாற்றம் அடையும். ஜெபமானது பாவத்தின் மீது நமக்கு வெற்றியையும், விடுதலையையும் சமாதானத்தையும் கொண்டுவரும்.

### 4. ஜெபத்தினால் பிரிந்த குடும்பங்கள் இணைந்து வாழும்:

தமிழ்நாட்டில் சங்கரபுரத்திலுள்ள திரு பாலபந்தம் என்ற கிராமத்தில் நமது விசுவாசி பாக்கியத்தைத் திருமணமான மூன்றே மாதத்தில் அவரது கணவர் விட்டுப் பிரிந்து சென்றார். ஜெபவீரர்கள் பாக்கியத்திற்காகத் தொடர்ந்து ஜெபித்த போது, ஏழு ஆண்டுகளுக்குப்பின் அவர் கணவர் மனந்திரும்பி மீண்டும் வந்து, தன் மனைவியோடு இணைந்து வாழ்கிறார்.

### 5. ஜெபத்தினால் கொலை வெறியும் மாறும்:

ஜார்க்கண்ட் மாநிலம், போரியோ பணித்தளத்தில் நௌகாசி என்ற கிராமத்தில் வாழும் மக்கள், புதிய நபர் ஒருவரைக் கண்டுவிட்டால் கொலை செய்யும் பழக்கமுடையவர்கள். இவர்கள் மத்தியில் விசுவாசிகள் ஒரு குழுவாகச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். ஆனால் அம்மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, சுவிசேஷம் சொல்ல வந்தவர்களை மிரட்டி அனுப் பினர். ஆனால் வல்லமையுள்ள தேவன் அவர்களது ஜெபங்களைக் கேட்டு, அந்த முழு கிராமமும் ஞானஸ்நானம் பெற வழிசெய்தார். இப்பொழுது அக்கிராம மக்கள் அனைவரும் ஆண்டவரை ஆராதிக்கின்றனர்.

### 6. ஜெபத்தினால் மக்கள் அழிவிலிருந்து தப்புவிக்கப்படுவர்:

ஆபிரகாமின் ஜெபத்தைக் கேட்டு லோத்துவையும், அவன் குடும்பத்தையும் அழிவின் நடுவிலிருந்து தேவன் தப்பு வித்தார். தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, ஆபிரகாமை நினைத்து லோத்து குடி யிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப் போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பி விட்டார் (ஆதி.19:29).

அதுபோல மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, தேவன் இஸ்ரவேல் ஜனங்களை அழிக்காமல் அவர்கள் மேல் பரிதாபம் கொண்டார். மோசே ஜனங்களை அழிக் காதபடி தேவனிடத்தில் மன்றாடி, கெஞ்சிப் பிரார்த்தனை செய்தான். அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார் (யாத்.32:14).

### *நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?*

*“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்,*
*எல்லாவற்றையுங்குறித்து உங்கள்*
*விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே*
*கூடிய ஜெபத்தினாலும்,*
*வேண்டுதலினாலும் தேவனுக்குத்*
*தெரியப்படுத்துங்கள். அப்பொழுது,*
*எல்லாப் புத்திக்கும் மேலான தேவ*
*சமாதானம் உங்கள் இருதயங்களையும்*
*உங்கள் சிந்தைகளையும்*
*கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக்*
*காத்துக்கொள்ளும்.” -பிலி.4:6,7*

### 1. ஒன்றுக்கும் கவலைப்படாமல், கர்த்தர்மேல் நமது பாரத்தை வைத்து ஜெபிக்க வேண்டும்:

தேவ ராஜ்யத்தின் பாரத்தை நாம் சுமந்து ஜெபித்தால், இயேசு நமது பாரத்தைச் சுமப்பார்.

*உதாரணம்:* யோபுவின் ஜெபம் (யோபு 42:10).

### 2. ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் வரை ஜெபிக்க வேண்டும்:

ஆண்டவரை அமர்ந்திருக்க விடாமல் நாம் ஜெபிக்க வேண்டும் (ஏசாயா 62:6,7).

*உதாரணங்கள்:* கானானிய ஸ்திரீ (மத்தேயு 15:21-28); பரமண்டல ஜெபம் - நண்பனின் நடுநிசி வேண்டுதல் (லூக்கா 11:1-8).

### 3. விழித்திருந்து மன்றாடி ஜெபிக்க வேண்டும்:

சோதனைக்குட்படாதபடிக்கு ஒரு மணி நேரமாவது நாம் ஜெபிக்க வேண்டும். ஜாண் வெஸ்லி தினமும் 8 மணி நேரம் ஜெபித்தார்.

*உதாரணம்:* இயேசு விழித்திருந்து மன்றாடி ஜெபித்தார் (லூக்கா 22:44-46).

### 4. பரிசுத்தமாய் வாழ்ந்து, பரிசுத்தமாய் ஜெபிக்க வேண்டும்:

பாவ இச்சைகளை நாம் அடியோடு வெறுத்துவிட வேண்டும். ஆண்டவர் நம்மைப் பரிசுத்தமாக்குவார், பரிசுத்தமாய் வாழ உதவிசெய்வார் என்று விசுவாசித்து அவரைச் சார்ந்து வாழவேண்டும் - வெளி.5:8.

தொடர்ந்து முழு அர்ப்பணத்துடன் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும். வெளி 8:3,4 - பரிசுத்தமாய் வாழ்கின்ற பரிசுத்த வான்களின் ஜெபம்தான் கேட்கப்படும். (எபி.4:15-16; 2கொரி.9:8; ரோமர் 3:22)

### 5. சகலவிதமான ஜெபங்கள், வேண்டுதல்கள் செய்யவேண்டும்:

சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் - எபே. 6:18

### ஏழு விதங்களில் ஜெபிக்க வேண்டும்:

1. கேளுங்கள், 2. தேடுங்கள், 3. தட்டுங்கள், 4. உபவாசித்து ஜெபியுங்கள், 5. தேவ பாரம் பெற்று ஜெபியுங்கள், 6. மன்றாடி ஜெபியுங்கள், 7. மல்யுத்தம் செய்து அல்லது போராடி ஜெபியுங்கள்.

### தங்களின் கனிவான கவனத்திற்கு...

கடந்த மாத அறைகூவல் பத்திரிக்கையில் "திட்டமிடுதலும்; அதன் வெற்றியும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையில், ஆலயங்கள் கட்டுவது, ஏழைப் பிள்ளைகளை வளர்ப்பது, மருத்துவ வசதிகளை உருவாக்குவது போன்றவற்றைக் குறித்து எழுதப்பட்டதைத் தெளிவுப்படுத்த விரும்புகிறோம். சமுதாய மேம்பாட்டுப் பணிகளைச் செய்யக்கூடாது என்ற நோக்கத்தில் அவைகளை எழுதவில்லை. சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்கு நமது தரிசனமாகிய சுவிசேஷப் பணியை / மிஷனெரிப் பணியை விட அதிக முக்கியத்துவம் கொடுத்துவிடக்கூடாது என்பதைத்தான் குறிப்பிட்டுள்ளோம். தேவையுள்ள இடங்களில், தேவைகளின் அடிப்படையில் சமுதாய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளோம் என்பதையும் அவைகள் தொடரும் என்பதையும் உறுதிப்படுத்துகிறோம்.



# ஜெபத்தின் கோட்பாடுகள்

## நமது சிந்தனைக்கு...

- கிறிஸ்தவ ஆவிக்குரிய வட்டாரத்தில் 'ஜெபம்' மற்ற எல்லாவற்றையும்விட மிக அதிக மாகப் பேசப்பட்டாலும், மிகக் குறைவாகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்காலத்தில் ஜெபம் பெரும்பாலும் பயன்படுத்தப்படாத மூலதனமாகவும், தோண்டியெடுக்கப்படாத புதையலுள்ள கண்டுபிடிக்கப்படாத கண்டமாகவும் காணப்படுகிறது. ஆனால் விசுவாசிகளுக்கோ, அது அவர்களது இரட்சிப்பிற்காகத் தேவனால் அருளப்பட்ட மிகப் பெரியதொரு பொக்கிஷமாகும்.
- ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஜெபஜீவியமும், நல்லதொரு திருமணத்தைப் போன்றது. அதாவது, ஒவ்வொரு திருமணத்திலும் பொதுவான அனுபவங்கள் பல வெளிப்படையாகக் காணப்பட்டாலும், அத்திருமண உறவில் இரகசியமான தனித்துவங்களும் உள்ளடங்கியிருப்பதுபோல, தேவனுக்கும் விசுவாசிக்குமிடையே காணப்படும் மிக நெருக்கமான தனித்துவம் வாய்ந்த சிறந்த உறவே ஜெபமாகும்.
- சி.எச். ஸ்பர்ஜன் ஜெபத்தைக் குறித்து, "ஜெபத்தின் இதயம் என்பது நம் இதயத் திலிருந்து ஏறெடுக்கப்படுகிற ஜெபமேயாகும்" என்று குறிப்பிடுகிறார்.
- பூமியிலுள்ள ஒரு சாதாரண சிருஷ்டியாகிய மனிதன் அண்ட சராசரங்களையும் படைத்த பரலோகத்திலுள்ள சிருஷ்டிகரோடு கொண்டுள்ள தொடர்பே ஜெபமாகும். இது விந்தையிலும் விந்தையே (ஏசா.57:15).
- ஜெபிப்பவரின் இதயத்தைத் தேவனுடைய இதயத்தோடு நேரடியாக இணைப்பதே ஜெபத்தின் நோக்கமாகும் என்று வேதாகமம் தெளிவுப்படுத்துகிறது.
- ஒழுங்கும் கிரமமுமான ஒரு ஜெபஜீவியத்தை இயேசு தாமும் கடைபிடித்ததோடு, தமது சீஷர்களையும் அந்த ஜெபமாதிரியைப் பின்பற்றக் கூறியுள்ளார்.
- எளிமையாக ஜெபிப்பதே ஜெபத்தின் திறவுகோலாகும் (மத்.6:7).
- ஜெபப்பாசறையில் பயில்பவர்களே ஞானமுள்ள கிறிஸ்தவ விசுவாசிகள் ஆவர்.
- எப்படி நாம் ஜெபிக்கவேண்டுமென தேவன் நினைக்கிறாரோ அப்படியாகவே நாம் அனைவரும் ஜெபிக்கலாம். அதற்கான ஒரே விதியென்னவெனில், ஜான் சாப்மேன் குறிப்பிடுவதுபோல – "வேத வழிகாட்டுதலின்படி, உங்களால் இயன்ற அளவில் மாத்திரம் ஜெபியுங்கள்; இயலாததை முயற்சிக்காதீர்கள்." ஏனெனில், நம்மால்

முடியாததை வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்வார்.

- இயல்பாகவே மனிதர்கள் சுயநலவாதிகளாய்க் காணப்படுவதால், குறிப்பாக நாம் பிறருக்காக ஜெபிக்கும்போது, ஜெபம் நமது சுயநலத்தைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

- நம்மை நாமே நல்லவர்களாக மாற்ற கண்மூடித்தனமாக முயற்சிப்பதின் மூலம், தேவனைப் பிரியப்படுத்த முடியாது; மாறாக, ஜெபத்தின் மூலம் நமது இயலாமையைத் தேவனிடம் கூறி, அவரது கரங்களில் நாம் விழுவதின் மூலமே அது சாத்தியமாகும்.

- தேவன் நமது ஜெபங்களுக்குப் பதிலளிப்பது நாம் நல்லவர்களென்பதினால் அல்ல; அவர் நல்லவர் என்பதினால் மாத்திரமே.

- நமது ஜெபம் மிகவும் பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால், அதை நாம் நமது கீழ்ப்படிதலுக்கு மாற்றாகப் பயன்படுத்தக்கூடாது.

- ஒரு வார்த்தைக்கூட கூறாமல், எதையும் கேட்காமல் நாம் தேவனிடம் ஜெபிக்கும் ஜெபமானது சில மிகப் பெரிய ஜெபங்களில் ஒன்றாகும்.

- ஜெபத்திற்கு சிறகுகள் உண்டு. எனவே, ஜெபத்தால் நம்மை இருண்டமேகம் போன்ற இவ்வுலகப் போராட்டத்திற்கு அப்பால் உயரே கொண்டுச்செல்ல முடியும்.

- நாம் எக்குறிப்பிட்ட காரியத்திற்காகவும் ஜெபிப்பதற்கு முன், அக்காரியம் தேவனுடைய சித்தத்திற்கு உகந்ததா என அறிதல் அவசியம்.

- தேவனின் சித்தத்தை அறிந்துகொள்வதற்காக நாம் ஜெபிப்பது, அவரது சித்தத்தை அறியாமல் பல மணிநேரங்கள் ஜெபிப்பதைவிட அதிக முக்கியமானது.

- ஜெபிக்காமல் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பல பிரசங்கங்களைப் பிரசங்கிக்கும் அநேக ஊழியர்களைக் காட்டிலும், பரிசுத்தமான சுத்த ஜீவியம் செய்து, ஒவ்வொரு நாளும் மூன்று மணி நேரம் ஜெபிக்கிறவர்களே தேவராஜ்யத்திற்கு பெரும் நன்மை செய்கிறவர்களாவர்.

- நீண்ட இடைவிடாத விசுவாசம் நிறைந்த ஜெபமே ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும், திருச்சபைக்கும் உண்மையான ஆவிக்குரிய மறுமலர்ச்சியைக் கொண்டுவர முடியும்.

- ஜெபப்பள்ளியறையில் முன்னேற்றம் காண விழையும் ஒவ்வொருவரும் எல்லாவற்றிலும் குறிப்பாக தூக்கத்திலும், சிந்தையிலும், பேச்சிலும் சுயக்கட்டுப்பாடு கொண்டிருத்தல் அவசியமாகும்.

- நமது இருதயத்தை ஆராயாத, அதில் தாக்கத்தையும் எழுச்சியையும் தூண்டாத எந்தவொரு ஜெப எழுப்புதலும், நமது வெறும் மனித உணர்ச்சிவசத்தின் அடிப்படையில் உருவானதே!

- ஜெபத்தில் வரும் கவனச்சிதறல்களை நாம் முறியடிக்கவேண்டும். இல்லையெனில், அவை நம்மை வென்றுவிடும். எனவே அதை முறியடிக்க, நமது மனதில் எளிமையைப் பயிற்றுவிப்போம்.
- தேவனால் தமது வார்த்தைக்குப் புறம்பாக அல்லது நமது சுயநல விண்ணப்பத் திற்கேற்ப பதிலளிக்கவோ, இணக்கம் தெரிவிக்கவோ முடியாது.
- ஜெபங்களுக்குத் தேவன் மூன்று பதில்களைக் கொண்டுள்ளார். அவை 'ஆம், இல்லை, காத்திரு' என்பதே. அதில் அவர் நமக்குக் கொடுக்கும் பதில் 'காத்திரு' என்றிருக்கும்போது, தேவன் நம்முடைய காலஅட்டவணையில் இல்லை, நாம்தான் அவருடைய காலஅட்டவணைக்கு மாறவேண்டும் என்பதை நமது ஜெபம் நமக்கு வலியுறுத்துகிறது.
- ஜெபத்தில் தேவனோடு அதிக நேரம் செலவிடுகிறவர்கள், அவரின் அன்பில் மென் மேலும் வளர்ந்து, தேவசித்தத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்கிறார்கள். அதனால் அவர்கள் தங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளை உணர்வதோடு, மற்றவர்களின் தேவையைக் குறித்தும் அதிக கரிசனை கொள்ளக்கூடிய விழிப்புணர்வையும் அடைகிறார்கள்.
- தங்களால் செய்ய இயலாததைச் செய்யக்கூடிய மனிதர்களையே தேவன் தேடுகிறார்; ஆனால் நாமோ, நம்மால் எதைச் செய்யமுடியுமோ அதைக்குறித்து மாத்திரமே ஜெபத்தில் திட்டமிடுகிறோம்.
- தங்களது ஊழியத்தை ஜெபத்திற்குள் ஊற வைத்தவர்களே, தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாளில் சிறப்பான வெற்றியின் கிரீடத்தை வெல்வார்கள்.


## FORM IV

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 29, High School Road, Ambattur, Chennai - 53 |
| Periodicity | : | Monthly |
| Printer's Name | : | RASI GRAPHICS PRIVATE LIMITED |
| Nationality | : | Indian |
| Address | : | 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. |
| Publisher's Name | : | S. Sutharsan Thomas Jeyaraj |
| Nationality | : | Indian |
| Address | : | FMPB - HEAD QUARTERS, 29, High School Road, Ambattur, Chennai - 600 053. Phone: 044-26570404 |
| Owner's Name | : | Friends Missionary Prayer Band |

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 01.03.2021

Publisher
S. Sutharsan Thomas Jeyaraj

# தேசிய திட்டமிடல் மாநாடு - 2021

**(அறிக்கை)**

தேவ ஒத்தாசையால் ‘தேசிய திட்டமிடல் மாநாடு’ கடந்த பிப்ரவரி 13 & 14-ம் தேதிகளில் சென்னையிலுள்ள குருகுலம் இறையியல் கல்லூரியில் வைத்து “கர்த்தர் மாறாதவர்” (மல்கியா 3:6) என்கிற கருப்பொருளை மையமாகக் கொண்டு மிகச்சிறப்பாக நடைபெற்றது. நமது மூத்த பணித்தள மிஷனெரிகள், ஜெபக்குழுப் பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் என நூற்றுக்கணக்கானோர் இம்மாநாட்டில் கலந்துக் கொண்டனர்.









நமது இளைஞர் பிரிவின் கௌரவ பொறுப்பாளர் சகோ. இம்மானுவேல் அவர்கள் தனது குழுவினரோடு சேர்ந்து, இம்மாநாட்டின் ஆராதனைவேளையைப் பொறுப்பெடுத்து நடத்தினார்கள். நமது இயக்கத்தின் தலைவர் சகோ. ரெஜினால்ட் அவர்கள் இம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்கள். அருள்திரு. அறிவர். J.N. மனோகரன் அவர்கள் மிகவும் சவாலான தேவச்செய்தியை அளித்தார்கள். நமது ஒவ்வொரு துறையின் பொறுப்பாளர்களும் தங்களது ஊழிய அறிக்கைகளைத் தேவையான விளக்கங்களுடன் அளித்தார்கள். நமது ஜெபப்பிரிவு செயலர் அருள்திரு. டேனியல் டேவிட் அவர்கள் ஜெபநேரத்தைப் பொறுப்பெடுத்து நடத்தினார்கள். பங்குப்பெற்றோர் 11 குழுக்களாகப் பிரிந்து, கொடுக்கப்பட்ட 10 கேள்விகளுக்கான பதில்களை ஆராய்ந்து ஆலோசித்தார்கள்.

இரண்டாம்நாள் கூடுகையில் நற்கருணை ஆராதனையிலும் அருள்திரு. அறிவர் J.N. மனோகரன் அவர்கள் சிறப்புச்செய்தி அளித்தார்கள். பின்னர் 11 குழுத்தலைவர்களும் தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்கள். நமது இயக்கத்தின் தலைவர் சகோ. ரெஜினால்ட் அவர்கள், அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களைப் புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பொதுச்செயலாளராக அறிவித்ததோடு, கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பொதுச்செயலாளராகச் செயல்பட்டு வந்த அருள்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ் அவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்தார்கள். அர்ப்பணிப்பின் ஜெபத்தை நமது இயக்கத்தின் துணைத்தலைவர் சகோ. ஜேம்ஸ் தர்மபாலன் அவர்கள் ஏறெடுத்தார்கள். பின்னர் தலைமை செயலகத்தின் செயலர் அருள்திரு. பிரபாகர சாரதி அவர்கள் இம்மாநாட்டில் கலந்துக்கொண்டோருக்கு நன்றி தெரிவிக்க, பொதுச்செயலாளர் அருள்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ் அவர்களின் ஆசீர்வாத ஜெபத்துடன் இம்மாநாடு இனிதே நிறைவுற்றது.

- அருள்திரு. பிரபாகர சாரதி, செயலர், FMPB - தலைமை செயலகம்.



# மறக்க முடியாத மாமனிதர்கள்

## திரு. ஏசா & திருமதி ரூத் ஏசா

### இளமை பருவம்

திரு. ஏசா அவர்கள், அன்பின் நகரம் (சாத்தூர் தாலுகா) என்ற ஊரில் திரு. தேவசகாயம் & திருமதி பொன்னம்மாள் ஆகியோருக்கு மகனாக 05.08.1943-ல் பிறந்தார். 3 ஆண்கள், 5 பெண்கள் உள்ள அவர்கள் குடும்பத்தில் இரட்டைப்பிள்ளைகளாக (ஏசா, யாக்கோபு) 5-வது நபராகப் பிறந்தார். இவர் வாலிபப்பருவத்தில் தனது கிராமத்தின் மற்ற வாலிபர்களோடு சேர்ந்து சினிமா, பீடி, சிகரெட் போன்ற பாவங்களில் வாழ்ந்து வந்தார். தீப்பெட்டி மற்றும் வெடிமருந்து தொழிற்சாலைகளில் வேலை செய்து, பின்பு தன் அண்ணன்மார்களைப் போல இவரும் மின்சாரத்துறையில் வேலையில் சேர்ந்தார். அந்த நாட்களில் ஊழியம் செய்த பாப்திஸ்து மிஷன் மிஷனெரிகள் மூலம் இவர் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பாவப்பழக்கங்களிலிருந்து விடுதலை பெற்றார். ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களுடன் இணைந்து தெருப்பிரசங்கம், கிராம ஊழியம் போன்ற காரியங்களில் ஈடுபட்டு வந்தார்.

### குடும்ப வாழ்க்கை

1962-ம் ஆண்டு டிசம்பர் 24-ம் தேதி சகோ. ஏசா அவர்களுக்கும், சகோதரி ரூத் அதிசயமணி அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது. சகோதரி ரூத் அதிசயமணி 1942-ம் ஆண்டு திரு. தேவதாஸ் & திருமதி மரியம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது மகளாக ஏழாயிரம்பண்ணை அருகிலுள்ள அன்பின் நகரம் என்ற கிராமத்தில் பிறந்தார். இவரது தகப்பனார் ஆசிரியராகப் பணியாற்றியவர். தாயார் மரியம்மாள் வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தவர். சகோதரி ரூத் அதிசயமணி ஒன்றரை வயதாயிருக்கும்போது, இவரது தந்தை தீராத வயிற்று வலியினால் கஷ்டப்பட்டுத் திடீரென மரணமடைந்தார். இதனால் சந்தோஷமாயிருந்த அந்தக் குடும்பத்தில் மிகுந்த துக்கம் உண்டானது. பிள்ளைகள் வளர்ந்து வந்தபோது, இவர்களைப் பராமரிக்க கஷ்டப்பட்ட தாய் மரியம்மாள், தன் தம்பி யோவானின் வீட்டில் தனது பிள்ளைகள் இருவரையும் வளர்த்துத் தரும்படியாக விட்டுவிட்டார்கள். இருவரும் தங்கள் மாமா வீட்டில் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து விட்டு, தன் மாமா வின் பிள்ளைகளைக் கவனிக்கும் நிலை ஏற்பட்டது. சகோதரி ரூத்தின் அக்காளாகிய சகோதரி கோயில் பிச்சைக்கனி உயர் நிலைப்பள்ளி கல்விக்காக சாட்சியாபுரம் விடுதிப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். சகோதரி ரூத் அதிசயமணி படிப்பில் நாட்டமில்லாமல் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்டார். இதனால் அனைத்து வீட்டு வேலைகளையும் இவர் மட்டுமே செய்யும்படியான நிலை உருவானது.

### ஊழிய அழைப்பு

திரு. ஏசா அவர்கள், 1967-வது வருடம் கோவில்பட்டியில் நடைபெற்ற நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு கூட்டத்தில் பங்கெடுத்தார்கள். அந்தச் சமயத்தில்தான், தமிழகத்தில் அறியப்படாத மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டுமென்ற செய்தியைக் கேட்டபோது, தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார்கள். அந்தச் சமயத்தில் இவருக்குத் திருமணமாகி, 2 பிள்ளைகள் இருந்தார்கள். அப்போது பெரியமலையில் நமது ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. நண்பர்

சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாற்றில் மிக முக்கியமான நாள், ஜுன் 9-ம் தேதி ஆகும். "அற்பமான ஆரம்பத்தை யார் அசட்டைப் பண்ணக்கூடும்," எனச் சகரியா தீர்க்கன் கூறியதற்கு மிகவும் பொருத்தமான நாள் அது எனலாம். சகோ. ஹாரீஸ் ஹில்டன், டாக்டர். புஷ்பராஜ் ஆகியோர் நமது முன்னோடி மிஷனெரிகளாகவும், அவர்களுக்குப்பின் சகோ. எமில் ஜெபசிங், சகோ. சைமன் இராபர்ட்ஸ் மற்றும் பண்ணை விளை திரு. லாசரஸ் ஐயர் ஆகியோரும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள 'பெரியமலை' என்றழைக்கப்படும் இடத்திற்குச் சென்றார்கள். பின்பு சகோ. ஹில்டனுக்கு உதவியாக சகோ. ஏசா மற்றும் சகோ. ஜான் ஜேக்கப் ஆகியோர் அனுப்பப்பட்டனர்.

அந்நாட்களில் சகோ. ஏசாவின் மனைவியோ இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாத ஒரு பெயர் கிறிஸ்தவராக வாழ்ந்துவந்தக் காரணத்தினால், ஊழியம் செய்வதற்கு மனமற்றவர்களாயிருந்தார்கள். அந்தச் சமயத்தில் இவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள் இருந்தார்கள். பின்பு பண்ணைவிளை என்ற இடத்தில் நடை பெற்ற நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் கிதியோனியர் முகாமில் திருமதி ரூத் ஏசா இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட அந்த இரவில் இவர்கள் ஜெபிக்கும்போது, ''ஆண்டவரே, உம்முடைய வேதத்தை வாசிக்க எனக்கு வாஞ்சையாயிருக்கிறது. ஆனால் எனக்கு வாசிக்கத் தெரியாது. எனக்கு வாசிக்கச் சொல்லித் தாரும்," என்று வாஞ்சையோடு ஜெபித்தார்கள். தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு, தமிழ் வேதாகமத்தை வாசிக்க கற்றுக்கொடுத்தார்.

ஆரம்ப கால ஊழியங்களில் எளிமை யான, கடினமான எந்த வேலையையும் செய்தவற்கு திரு. ஏசா தன்னை முழு மனதோடு அர்ப்பணித்தார்கள். உதாரண மாக பெரியமலையில் கடைகளோ, வீட்டுச் சாமான்கள் வாங்கும் வசதிகளோ எதுவுமில்லாததினால், அடிவாரத்திலுள்ள மாரண்டஹள்ளியில் சென்று அரிசி, பருப்பு மற்றும் அனைத்து சாமான்களையும் தோளில் சுமந்துக் கொண்டு நடந்தே வந்து விடுவார்கள். மலையில் வாழும் மக்கள் கூட ஒரே நாளில் மாரண்டஹள்ளி சென்று திரும்ப முடியாது. மற்றும் வழியில் யானை தொந்தரவுகளுமிருப்பதால் பயப்படுவார்கள். ஆனால், திரு. ஏசா எதற்கும் அஞ்சாமல் செல்வார்கள். ஒருசமயம் இவர்கள் யானையை நேரில் பார்த்துவிட 'அல்லேலூயா!' என்று சத்தமிட்டபோது, அந்த யானை கூட தானாகவே ஒதுங்கிச் சென்றுவிட்ட சாட்சியைச் சொல்லி யிருக்கிறார்கள்.

பின்பு 1974 முதல் சில வருடங்கள் தூத்துக்குடியில் நமது ஊழியர் பயிற்சி நிலையத்தில் பணிசெய்தார்கள். அதன்பின், சில வருடங்கள் பெத்தேலில் இணைந்துப் பணிசெய்தார்கள். 1986-வது வருடம் திரும்பவும் பெரியமலைக்குச் சென்று 1994 வரை அங்கு ஊழியம் செய்தார்கள். பின்பு 1994-ம் வருடம் சென்னை அம்பத்தூர் பகுதியிலுள்ள புதிய தலைமைச் செயலகத்திற்காக வாங்கப்பட்ட இடத்தைப் பராமரிக்கும் பணி செய்யும்படியாக அழைக்கப்பட்டார்கள். அந்த நாட்களில் திருமதி ரூத் ஏசா அவர்கள், அம்பத்தூர் பகுதி யைச் சுற்றியுள்ள இடங்களில் பெண்கள் ஜெபக்குழுவை ஆரம்பித்து, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்தார்கள்.

## திருமதி ரூத் ஏசாவின் சுகவீனம்

திருமதி ரூத் ஏசா அவர்கள், 1996-ம் வருடம் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு, CMC வேலூரில் சிகிட்சை பெற்று வந்தார் கள். தன்னுடைய சுகவீனத்தின் மத்தி யிலும், அநேக பெண்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வதின் மூலம் ஆண்டவர் அன்பை அறிவித்து வந்தார்கள். கஷ்டப்படுபவர்களுக்கு உதவிசெய்வது, வீட்டிற்கு வருபவர்களை முகமலர்ச்சியோடு உபசரிப்பது ஆகியவைகள் இவர்களுடைய

மேலோங்கிய நற்பண்புகள். 2005 முதல் சிறுநீரகப் பிரச்சனையினாலும் இவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு, சரீர பெலவீனத் தினிமித்தம் சிறுநீர்க் கலவை பிரிப்பு (Dialysis) செய்ய முடியாத நிலையில் இருந்தார்கள். ஆயினும், இவர்களது வாஞ்சையின்படி சொந்தமாக வீடு கட்டி அதில் குடியிருக்க தேவன் கிருபை செய்தார். அதன்பின் இவர்கள் உடல்நிலை மேலும் அதிக பெலவீனமடைய ஆரம்பித்தது. எனவே ஜனவரி 8-ம் தேதி 2013 அன்று மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள்; பின் சிகிட்சை பலனின்றி 12.01.2013 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

தேவகிருபையால் தனது 6 பிள்ளைகளையும் நன்றாக வளர்த்து, பிள்ளைகளின் திருமணக்காரியங்களைத் தேவசித்தப்படி நடத்தி வைக்க தேவன் இவர்களுக்கு உதவிச்செய்தார். இவர்களுக்கு 14 பேரப் பிள்ளைகளும் உண்டு. மகன் திரு. வாட்ச் மேன் நீ ஜோப், சண்டிகர் மற்றும் ராஞ்சி போன்ற இடங்களில் இருந்து ஊழியம் செய்தார்கள். மகள் திருமதி ஹெலினா குடும்பமாகச் சென்னை- குருகுலம் வேதாகமக்கல்லூரியில் ஆசிரியராகப் பணி யாற்றுகிறார்கள். மூத்த மகள் திருமதி தேவமணி குடும்பமாக வேதாகமம் மற்றும் வசனபோர்டுகள் விற்கும் பணியைச் செய்கிறார்கள். மகன் திரு. ஜான் ராக்லண்ட் மற்றும் கடைசி மகன் திரு. ரிச்சர்ட் இருவரும் பகுதி நேரமாகத் தேவனுடைய பணியைப் பலவிதங்களில் செய்து வருகிறார்கள். குறிப்பாக, மகள் திருமதி மேரி புஷ்பம் சிறுவர் பிரிவிற்குப் பொறுப்பாகச் சென்னை யிலும், பேத்தி திருமதி ஷக்கினா கிருபா ரக்ஷக் குடும்பமாகப் பஞ்சாப் மாநிலத்திலுமாக நமது இயக்கத்தில் மிஷனெரிப்பணியைச் செய்து வருகிறார்கள்.

## *திரு. ஏசாவின் இறுதி வாழ்க்கை*

திரு. ஏசா அவர்கள் ஓய்வு பெற்ற பின், பட்டாபிராம் ஜீவ ஒளி திருச்சபை, அம்பத்தூர் பெதஸ்தா திருச்சபை போன்ற சபைகளில் பாஸ்டர்களோடு சேர்ந்து கிராமங்களில் பணியாற்றி வந்தார்கள். இவர்கள் தனது மனைவியின் மறைவிற்குபின், மதுரையி லுள்ள முதியோர் விடுதி மற்றும் அங்குள்ள ஜெபப்பிரிவில் தன்னை இணைத்துக் கொண்டு, இறுதி வரை எளிய மக்களுக்குச் சுவிசேஷம் சொல்வதிலும், அவர்களை விசாரித்து அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள். இவர்கள் தங்கியிருந்த மதுரை- சறந்தாங்கி பகுதியில் கட்டிட வேலை செய்ய வரும் தொழிலாளர்களுக்காகத் தினமும் ஜெபம் நடத்துவார்கள். பின்பு அவர்களது குடும்பங்களைச் சந்தித்து, தீராத கடன்பிரச்சனை மற்றும் குடும்பப் பிரச்சனைகளுக்காக ஜெபித்து, இயேசு வின் அன்பை அவர்களுக்குக் கற்றுக்கொடுப் பார்கள். இதனால் அநேக குடும்பங்களில் தேவன் அற்புதமாகக் கிரியை செய்தார்.

எதிர்பாராதவிதமாக 15.12.2015 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் திரு. ஏசா அவர் களுக்குக் காலில் அடிப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், கர்த்தர் தமது சித்தத்தின்படி அன்று மாலையிலேயே இவரைத் தமது இராஜ்யத்தில் பிரவேசிக்கச் செய்தார். ‘கிறிஸ்துவுக்காக இழந்தவர் எவரும் தரித்திரர் ஆனதில்லை; இராஜ்ய மேன்மைக்காய் கஷ்டப்பட்டோர் நஷ்டப்பட்டதில்லை’ என்ற வார்த்தையின்படி, இவர் தனது இறுதிமூச்சு வரை கர்த்தர் தனக்குத் தந்த ஊழியத்தைச் சிறப்பாக நிறைவேற்றி முடிக்கவும், தனது 6 பிள்ளைகளையும் கிறிஸ்துவின் சேவை யில் முழுமனதோடு உற்சாகமாக ஈடுபாடுக் கொள்ளவும் செய்தார். கிறிஸ்துவுக்காக நற்சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்துக்காட்டிய திரு. ஏசா & திருமதி ரூத் ஏசா அவர்களின் அழகிய வாழ்விற்காகத் தேவனைத் துதிப்போம். நாமும் உத்தமமாய் கிறிஸ்து வைப் பின்பற்றி, இவர்களை நமக்கு நல்லதொரு முன்மாதிரிகளாக்குவோம்.

*– அருள்திரு. அறிவர். இ. ராஜன்*

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திரு. V.K. ஜெயசிங் அண்ணன் அவர்கள் (வயது-71), கொடுங்கையூர்- சென்னை, கடந்த 24.01.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். சுமார் 35 ஆண்டுகளில் FMPB அங்கத்தினராகவும், ஜெபக் குழுத் தலைவராகவும், கடந்த 5 வருடகாலமாக மண்டலச் செயலாளராகவும் பணிபுரிந்து, நமது இயக்கத்திற்காக அயராது உழைத்தார்கள். "அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புக்களை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன்," (ஆமோஸ் 9:12) என்ற வசனத்தின்படி, கொடுங்கையூர் பகுதியில் நமது ஊழியம் நலிவடைந்த நிலையில் இருந்தபோது, தலைமைத்துவ பொறுப்பை ஏற்று, அதில் வந்த சவால்களைச் சந்தித்து ஊழியத்தைத் திரும்ப வழிநடத்தினார்கள். நமது இயக்கத்தின் மிஷனெரிப்பணிக்காக அதிகம் கொடுப்பதிலும், கடினமாக உழைப்பதிலும் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டவர்கள். ஒவ்வொரு மாதமும் 10-ம் தேதிக்குள் நன்கொடைகளை மக்களிடம் சென்று சேகரித்து, ஜெபக்குழுத்தலைவர்களை உற்சாகப்படுத்தி இப்படியாகப் பணிபுரிய வைத்து, தலைமை செயலகத்திற்கு தானே சென்று பணத்தை ஒப்படைப்பார்கள். அன்னாரது மனைவி திருமதி Dr. ஞான செல்வம், மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் நமது இயக்கத்திற்குப் பெரும் ஆதரவாக இருக்கும் 2 மகன்கள் திரு. ஆல்வின் & திரு. பால்வின் குடும்பங்களுக்காகத் தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

– கௌரவ விரிவுப்பணி செயலர், கொடுங்கையூர்.



திரு. ஜான் காலேப் அவர்கள் (வயது-70), உடல் பெலவீனத்தின் காரணமாகக் கடந்த 13.01.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் தமிழ்நாடு போக்குவரத்துத்துறையில் அதிகாரியாகப் பணி செய்துகொண்டு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஜெபக்குழுத்தலைவராகவும் சிறப்புடன் செயல்பட்டவர். இவர்கள் குடும்பமாக 2020-ம் ஆண்டு ஜனவரியில் உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூர் பிராந்தியத்தில் ஒரு ஆலயம் கட்டிப் பிரதிஷ்டை செய்தார்கள். இவருடைய சாட்சியுள்ள வாழ்க்கைக்காகத் தேவனைத் துதிக்கிறோம். இவரது மனைவி திருமதி விமலா மற்றும் 2 மகன்மார் குடும்பங்களுக்கும் தேவன் ஆறுதலையும் சமாதானத்தையும் தந்து பெலப்படுத்த நமது ஜெபங்களில் நினைவுகூருவோம்.

– கௌரவ பிராந்திய விரிவுப்பணி செயலர், சென்னை – கே. கே. நகர்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திரு. லாரன்ஸ் அவர்கள், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு முன்னோடி தலைவர்களில் ஒருவர் ஆவார். இவர் தனது 80-வது வயதில் 25.01.2021 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். 1965-ம் ஆண்டு சேலம், டேனிஷ்பேட்டை, பெத்தேலில் 35-பேராகக் கூடி ஜெபித்தவர்களில் இவரும் ஒருவர். இவர் மாதந்தோறும் நல்மீட்பர் சி.ஸ்.ஐ ஆலயம், இலத்தகிரி மூலமாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு 50 வருடத்திற்கும் மேலாகக் காணிக்கைகளை அனுப்பி வைத்தவர். இவர் தனது பெலவீனத்தின் மத்தியிலும் இரண்டு மாதங்களுக்கு முன்பாக 60 காலண்டர்களை வாங்கி, அந்தப் பகுதியிலுள்ள ஜெபக்குழு அங்கத்தினர்களைச் சந்தித்து, உற்சாகமாகக் கொடுத்து Carol காணிக்கைகளைத் தலைமை செயலகத்திற்கு அனுப்பி வைத்தார். இவருடைய மறைவு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கும் திருச்சபைக்கும் மாபெரும் இழப்பு. 25.01.2021 அன்று கடைசியாக ICU-ward- க்கு செல்லும் போது "அல்லேலூயா, ஸ்தோத்திரம்!" என்று சொல்லிக் கொண்டே, ஆண்டவருடைய ராஜ்யத்தில் பிரவேசித்தார். அன்னாரை இழந்து வாடும் மனைவி திருமதி கிரேஸ் வசந்தா, மகன் திரு. தியோடர் ராபின்சன் & மருமகள் திருமதி ஸ்டெல்லா தியோடர், மகள் திருமதி மெர்சி, நான்கு பேத்திகள், ஒரு கொள்ளு பேத்தி ஆகியோருக்காகவும் ஜெபித்துக்கொள்வோம்.

– விரிவுப்பணி, கிருஷ்ணகிரி மாவட்டம்.



கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பணிமாவட்டத்தில் தொழிக்கோடு பகுதியைச் சார்ந்த திரு. எஸ். வர்கீஸ் அவர்கள், கடந்த 30.01.2021 அன்று தனது 70-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் பேரூராட்சி செயல் அலுவலராகப் பணியாற்றியவர். பணிக்காலத்தில் கடமையுணர்வுடனும், கறைபடாத கரத்துடனும், ஏழைகளுக்கு இரங்குபவராகவும் செயல்பட்டார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தலைவராகச் சுமார் 20 ஆண்டுகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டார்கள். ஜெபக்குழுக்கள் நடத்தியும், திருச்சபைகளில் சென்று செய்தியளித்தும், ஒரு மிஷனெரியைக் குடும்பமாகத் தாங்கியும், அநேக குடும்பங்களைச் சந்தித்து திரளாகக் காணிக்கை பெற்று அனுப்பியும், ஆண்டுதோறும் பணித்தளங்களைப் பார்வையிட்டு மக்களை உற்சாகப்படுத்தியும், அங்குள்ள மக்களுக்குப் பல உதவிகளையும் செய்து வந்தார். இவருக்கு ஒரு மகளும், மகனும் உண்டு. அன்னாரின் பிரிவு அவரது குடும்பத்திற்கும் நமது இயக்கத்திற்கும் பேரிழப்பாகும். இவர் விட்டுச்சென்றுள்ள பிள்ளைகளைத் தேவன் ஆறுதல் படுத்தி, ஆசீர்வதிக்க நமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.

– கௌரவ விரிவுப்பணி செயலர், கருங்கல்.

# காலச் சுவடுகள்



*ஜான் ஹன்ட்*

# ஹவாயில் உருமாற்றம்

ஐரோப்பாவில் லின்கான் என்ற பகுதிக் கருகிலுள்ள ஹைகேஹாம் என்னுமிடத்தில் 12.12.1812-ல் ஜான் ஹன்ட் பிறந்தார்; இவர் தனது 36-வது வயதில் மறுமைக்குள்போயிருப்பினும், ஃபிஜி தீவுகளுக்குக் கிறிஸ்தவத்தைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தவர் என்று இன்றும் போற்றப்படுகின்றார். ஸ்வின்டர்பை என்னுமிடத்தில் உள்ள மெதடிஸ்ட் சிற்றாலயத்தில் இவர் சிறுவயதிலிருந்தே அங்கத்தினராயிருந்தார். ஒரு மாலையில் இவர், சுவிசேஷகர் ஜான் ஸ்மித்தின் அனல்பறக்கும் செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தபோது, இடையில் வீட்டிற்குப் போய்விடலாம் என்ற சிந்தை வந்தபோதும் எழ இயலாமல் செய்தியின் இறுதிவரை அங்கேயே அமர்ந்திருந்தார். அந்த அனுபவத்தை வார்த்தைகளால் ஹன்ட் கூறும்போது, "ஸ்மித்தின் செய்தியைக் கேட்ட எனக்கு உடல் முழுவதும் வியர்த்து, கண்ணீரால் நனைந்தது; ஏதோ ஒரு ஆற்றினுள் தூக்கி எறிந்துவிடப்பட்டது போன்ற உணர்வைப் பெற்றேன்," என்கிறார்.

ஜான் ஹன்ட் தன் வாழ்வில் மாமனிதராகுவதற்கு இவர் வாழ்ந்தப் பகுதியிலுள்ள இவருடைய சபை உறுப்பினர்களே காரணம் எனலாம். அவர்கள்தான் ஹன்ட்டின் திறமைகளை முதன்முதலில் அடையாளம் கண்டு, இவர் தன்னுடைய சாட்சியைப் பிறருடன் பகர்ந்திட உதவியாயிருந்தனர். பாட்டர் ஹன்வொர்த் மற்றும் வெட்டிங்டன் பகுதிகளில் இவர் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, வழக்கமாகப் போதிக்கும் ஒரு போதகராக ஹன்ட் மாறினார். 'கலப்பை போதகர்' என்றும் பிறரால் அன்போடு அழைக்கப்பட்டார்; பிற இடங்களிலும் போதனை செய்யும் வாய்ப்புகள் இவருக்கு வந்தன. இவருடைய செய்திகளின் வாயிலாகப் பலர் கிறிஸ்துவண்டை கிட்டிச் சேர்ந்தனர். முழுநேர ஊழியத்திற்குள் வர இவர் விரும்பினார். எனவே, லண்டனிலுள்ள வெஸ்லியன் இறையியல் கல்லூரியில் சேர்ந்து மாணவராகி, பின்னர் ஹன்னா சம்மர்ஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய்ய திட்டம் செய்தார்.

ஹன்ட் தன்னுடைய எதிர்கால ஊழியத்திற்காக லண்டனில் படிக்க வந்திறங்கியதும், லண்டனில் எழுப்புதல் உருவாகியது. எனவே, மிஷனெரி ஊழியத்தைப் பற்றி இவர் சிந்திக்கலாயினார். தென் ஆப்பிரிக்காவிற்கு மிஷனெரியாகச் செல்ல முதலில் நினைத்தார்; ஆனால் பின்பு நரமாமிச பட்சினிகள் வாழுகின்ற சவால்கள் நிறைந்த ஃபிஜி தீவுகளுக்குச் செல்ல விரும்பினார். இதைப்பற்றி தன் வருங்கால மனைவியிடம் கூறினார். அதற்கு, ஹன்ட் எங்கெங்கெல்லாம் செல்லுகின்றாரோ, அங்கெல்லாம்

தானும் செல்லத் தயாராக இருப்பதாக இவரது எதிர்கால மனைவி கூறினார். 1838-ம் ஆண்டு இத்தம்பதியினர் இங்கிலாந்தி லிருந்து கப்பல் வழியாகப் புறப்பட்டனர். கப்பல் பயணத்தின்போது, வசதியான ஊழியவாய்ப்பு ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த போதிலும் அதை மறுத்துவிட்டு, ஃபிஜியில் 22.12.1838-ல் வந்து சேர்ந்தனர்.

ஃபிஜிக்கு வந்து சேர்ந்த ஹன்ட்டிற்கு மொழி மட்டும் பிரச்சனையாக இருக்கவில்லை; இவர் கொல்லப்பட்டு சாப்பிடப்படக்கூடிய அபாயமும் இருந்தது. ஹன்ட் தன் கையேட்டில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார், ''மனித உயிர்களைப்பற்றி எவ்வித உணர்வும் இல்லாத மனிதர்களால் நான் சூழப்பட்டிருந்தாலும், எல்லாவித பயத்தி லும் இருந்து நான் விடுபட்டதாகவே நினைக்கின்றேன்." "நமது இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ள வராயிருக்கிறார்'' என்று 1 தீமோத்தேயு 2:3,4-ம் வசனங்களின் மீது ஹன்ட் மிக உறுதியாகயிருந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையில் மூன்று பிரசங்கங் களும், வாரத்திற்கு மூன்று முறை வகுப்புப் போதனைகளுமாக இவர் தன்னுடைய ஊழியத்தில் செயல்பட ஆரம்பித்தார். ஒரு சிறு மருத்துவமனையையும் தொடங்கி, நற்செய்தியை ஒருமுறைகூட கேட்டிராத மக்கள் வாழும் அருகிலுள்ள தீவுகளுக்கும் முறையாகத் திட்டமிட்டுச் சென்றுவந்தார்.

ஒருமுறை ஹன்ட் தனது ஊழிய அறிக்கை யில், "விவா என்னுமிடத்தையும் சேர்த்து 12 இடங்கள் எனக்கென்று கொடுக்கப் பட்டுள்ளன. ஏழு அல்லது எட்டு நிலைகளில் 300 மைல்கள் படகில் இவ்வாறு பயணப் பட்டுச் செல்வதினால், மாதத்திற்கு ஒரு முறைதான் ஒரு இடத்திற்குச் செல்ல முடிகின்றது. நான்கு வாரங்களில் ஒரு வாரம் தண்ணீரில் தான் இருக்கின்றேன். நிலத்தின் வழியாகப் பயணம் செய்வது மிகவும் குறைவே. என்னுடைய ஆயத்த ஊழியப்பணிகள் அனைத்தையும் படகில் தான் நிறைவேற்றுகின்றேன். ஃபிஜியில் நான் செல்லாத எந்த முக்கியமான இடமும் இல்லை. எனக்குப் புலப்படாத சிற்சில இடங்களைத்தவிர, மற்ற எல்லா இடங்களையும் சந்தித்துள்ளேன். ஆம், எல்லோருக்கும் நற்செய்தியை அறிவிக்கும் படி சர்வவல்ல கர்த்தரால் கட்டாயப் படுத்தப்பட்டு, வழிநடத்தப்பட்டுள்ளேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஹன்ட் தன்னுடைய மிஷனெரிப்பணி களின் மத்தியிலும் ஃபிஜி மொழியை நன்குக் கற்றறிந்தார்; நேரம் கிடைக்கும் போதெல்லாம் புதிய ஏற்பாட்டை ஃபிஜி மொழியில் மொழிமாற்றம் செய்ய ஆரம்பித்தார். ஃபிஜி மொழியில் சொல் அகராதியையும் உருவாக்கினார். அவருடைய முயற்சிகளுக்குக் கர்த்தர் பலனளித்தார். கடினமான ஆரம்பத்திற்குப் பின்னர், ஒரு தீவில் எழுப்புதல் ஆரம்பித்தது. இது ஆரம்பித்த முதல் வாரத்திலேயே 100 உள்ளூர் மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டனர். அவர்கள் பிறருடன் சண்டையிட்டுச் செல்லுகின்ற போர் வீரர்களாயிராமல், முழங்காலில் நின்று ஜெபிக்கின்ற ஜெபவீரர்களாக உருமாற்றம் பெற்றனர். 1845-ல் ஒரு தலைவனின் உறவினர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட தின் விளைவாக அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து, ஒருநாளில் விவாவின் அரசியும் பக்தியுள்ள கிறிஸ்தவராக மாறினார். அதன் பின்னர், அங்கே கடற்கரைகளில் நர மாமிசச் சண்டைகளால் உண்டான இரத்தக் கறைப்படிந்த இடங்களெல்லாம் கிறிஸ்து வின் அன்பின் அலைகளால் முற்றிலும் கழுவப்பட்டது. இதைப்பற்றிதான், "சிறிது நாட்களுக்கு முன்னர் மிகக் கொடூரமான நரமாமிசம் உண்டவர்கள், இப்பொழுது தங்கள் இரட்சகராகிய கர்த்தருக்குள்

களிகூர்ந்திருக்கின்றனர்" என ஹன்ட் தன் குறிப்பேட்டில் எழுதுகின்றார்.

ஜான் ஹன்ட்டின் மிகப் பெரிய வெற்றிகளில் ஒன்று, இவர் ஃபிஜி மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிமாற்றம் செய்ததாகும். அம்மொழிமாற்றத்தில், ஃபிஜியின் கலாச் சாரம் & உணர்வு ஆகியவை பாதிக்கப் படாதபடி மொழிமாற்றம் செய்தார். அவ்வாறு மொழிமாற்றம் செய்வதற்கு கிரேக்கமொழி புதிய ஏற்பாடும், சொல்லகராதியும் பேருதவி யாக அமைந்தன. புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளுக்கு மிகச்சரியான ஃபிஜி வார்த்தைகள் கிடைக்காததால், மனம் மாறிய ஃபிஜி மக்களிடம் கலந்தாலோசித்து, புதிய ஏற்பாட்டை மொழிமாற்றம் செய்தார். ஃபிஜி மொழியின் புதிய ஏற்பாடு 1847-ல் வெளியிடப்பட்டு, மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

வயிற்றுப்போக்கால் ஃபிஜியின் சுவிசேஷ ஊழியத்தின் முன்னோடியான ஹன்ட்டின் சரீரபலம் மிகவும் குறைந்துக்கொண்டே வந்தது. இவர் இந்நோயிலிருந்து மீள தீவுவாசிகள் அதிகம் ஜெபித்தனர். தங்களில் பத்து பேரை எடுத்துக்கொண்டு, ஹன்ட்டைத் தங்களுக்குத் தருமாறு கர்த்தரிடம் அவர்கள் மன்றாடினர். ஆனால் திடீரென ஹன்ட் அமைதியானார். அப்போது அங்கிருந்தோரில் ஒருவர், "ஹன்ட், உங்கள் முன்னே ஏதோ பிரகாச மான ஒன்று தெரிகின்றது," எனக் கூற, அதற்கு ஹன்ட் ''இயேசுவைத் தவிர வேறொன்றையும் நான் காணவில்லை," என்று கூறி, ஆச்சரியத்துடன் "அல்லேலூயா! அல்லேலூயா!" என்று சொல்லிக்கொண்டே, நித்திய ஓய்விற்குச் சென்றுவிட்டார். தன் வாழ்வின் கடைசி மணித்துளியில் ஹன்ட் கூறியது: ''கர்த்தாவே! ஃபிஜியை நான் நேசிக்கின்றேன் என்பதை நீர் அறிவீர். ஆகையால் ஃபிஜியைக் காப்பாற்றும், கர்த்தாவே!" என்பதாகும். இந்தக் காலக் கட்டத்திற்குள்ளாக ஃபிஜி மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிமாற்றம் செய்து முடித்து, பழைய ஏற்பாட்டை மொழிப்பெயர்க்க ஆரம்பித்திருந்தார், ஹன்ட். பின்னர் அப்பழைய ஏற்பாட்டின் மொழிமாற்றம் அருட்திரு. ஜேம்ஸ் கல்வர்ட் என்பவரால் நிறைவுசெய்யப்பட்டு, முழு வேதாகமமும் ஃபிஜி மக்களின் கரங்களைச் சென்ற டைந்தது.

ஆம், ஆயிரங்களாக அல்ல நூற்றுக் கணக்கில் மட்டுமே ஃபிஜியின் நரமாமிச வாசிகள் கர்த்தருடைய பாதத்தண்டை யில் வந்திருந்திருந்த காட்சியை ஹன்ட் கண்டிருந்தபோதிலும், வரும் நாட்களில் உலகம் முழுவதற்கும் கிறிஸ்துவின் நற்செய்திக்கு மகிமையாக இந்த ஃபிஜி தீவுகள் மாறும் என்ற ஆழமான தரிசனத்தை இவர் தன் உள்ளத்தில் திட மாகப் பெற்றிருந்தார். ஹன்ட் தன்னு டைய 36-வது வயதில் கர்த்தருக்குள் மரித்தார். இவரின் மரணத்திற்குப்பின்னர், அதே ஆவிக்குரிய உணர்வுகளுடன் பலர் ஃபிஜியில் ஊழியம் செய்ய வந்தனர். ஃபிஜி தீவில் ஹன்ட் கால்பதித்த 50-வது ஆண்டில், கிறிஸ்தவர்களல்லாதோர் அந்த ஃபிஜி தீவில் இருந்ததில்லை. ஃபிஜி மக்கள் எல்லோரும் தங்கள் விசுவாசத்தைக் கர்த்தரில் அறிக்கையிட்டனர். ஃபிஜியில் நடைபெற்ற இந்நிகழ்வு மாபெரும் கிருபை யின் அற்புதமாகும். பவுலின் அப்போஸ்தல ஊழியப்பாரம்பரியத்தைத் தொன்றுதொட்டு செய்து வந்த நவீன மாபெரும் அப்போஸ்தல ஊழியர்களான லிவிங்ஸ்டன், பேட்டன், சேல்மர்ஸ், ஹனிங்டன் மற்றும் நூற்றுக் கணக்கான ஊழியர்களுக்கு இணையாக ஹன்ட் போற்றப்படுகின்றார். இதற்கு மணிமகுடமாக அமெரிக்காவின் கிறிஸ்தவ ஜனாதிபதியான உட்ரோ வில்சன் மனித வாழ்வைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார், ''மனித வாழ்க்கை மிகவும் குறுகியது. ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஒன்றும் செய்யாமலிருப்பதை விட, சிறிதுகாலம் வாழ்ந்தாலும் மற்றவர்களுக்கு மகிமையின் வெளிச்சத்தைக் கொண்டு வருகிற வாழ்க்கையே சிறந்ததாகும்."

*- சகோ. டேவிட் பென்னி*

## மார்ச் 1 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டிங்கேவ் ஜெமி, திரு. ஹெலின் சிங்சிட்
திரு. தல்சகாம் சுவாண்டக்
திருமதி. சுரபி பீரோ அசோக் நாயக்
திருமதி. எல்லா பாமே ஜெமி, திரு. பினோத் சம்பிரமரி
திரு. லுன்கிம் டோங்காம் கோங்சய்
திரு. டிட்டுங்பௌ கே., திரு. ஜெய்பீர் சிங்
திரு. லெட்கோலுன் பய்தே
திருமதி. டிங்நய்நேங் சிங்சன், திரு. டீஹே
திரு. ஓம்பிரகாஷ் குப்தா
திரு. தாங்வான்சாங் ஜி., திரு. குல்தீப் சிங்
திரு. ஜம்கோன்காம் ஹயோகிப்
திருமதி. மார்கிரெட் சிங் தாஸ்
திரு. நிங்தோஜம் அலோன் சிங்
திருமதி. ஹொய்டின் மேட் லால்

## ஜம்மு

### ஜம்மு பிராந்தியம்: வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** புதிதாக 52 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 15 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். மண்டியல் கிராம ஹரா ராம் & கில்தாரி லால், நத்வால் கிராம அஜய்குமார், கலோஹா கிராம மோகன் லால், பந்த்ரால் கிராம ரவி சாகர் ஆகியோரின் குடும்பங்கள் நமது ஊழியத்தில் புதிதாகத் தொடர்பு கொண்டுள்ளனர். மந்த் கிராமத்தில் மீண்டும் ஆராதனை துவங்கப்பட்டிருக்கிறது. மண்டிவாலா கிராம ரேணுவைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், நாகிரி கிராம பரமுதேவியை மூச்சுத் திணறலிருந்தும் 8 மாதங்களாக அவருடைய காலில் காணப்பட்ட கால்புண் தொற்றிலிருந்தும், நோனியல் கிராம ரிங்குவைப் பக்கவாதத்திலிருந்தும் தேவன் குணமாக்கினார். தக்கோலியா கிராம ரோஷிணி மற்றும் மட்டுவைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் விடுவித்தார். நமது விசுவாசிகளான அமியா கிராம பவன் மற்றும் மோகன் லாலுக்குத் தனியார் கம்பெனியில் நல்ல தகுந்த வேலைகள் கிடைக்கக் கர்த்தர் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக குளிர்கால சிரமங்களுக்குத் தேவன் நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளை விலக்கிப் பாதுகாக்க; நாகிரி பகுதியில் சமீப நாட்களில் துவங்கப்பட்ட ஞாயிறு ஆராதனையைக் கிரமமாக நடத்துவதற்கு ஏற்ற இடமொன்று வாடகைக்குக் கிடைக்க; அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய விதத்தில் மூடப்பழக்கவழக்கங்கள், விபச்சாரம் மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வாழும் மாஷா இனமக்களின் இரட்சிப்பிற்காக; தக்கோலியா கிராமத்தில் தனது கணவரை ஆராதனைக்கு வர விடாமல் தடைசெய்யும் அவரது மனைவி ஷில்பா மனம்மாற; நாகிரி கிராம நமது விசுவாசி முன்னாவிற்கு மத்திய ரிசர்வ் போலீஸ் படையில் வேலை கிடைக்க; பப்பட் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு இணக்கம் தெரிவிக்கும் ராஜ்புட் இன மக்களின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட; மஹாசா மற்றும் பாகத் இன மக்கள் கூட்டங்கள் வசிக்கும் பகுதிகளான படோத், ராம்கட், நரோத் ஆகிய இடங்களில் திறந்திருக்கும் சுவிசேஷ வாசல்களைச் சுதந்தரிக்க ஏதுவானவிதங்களில் நமது ஊழியங்கள் நல்வளர்ச்சிப் பெற; சிறிய ஜெபக்குழுக்கள், பெண்கள் ஜெபக் குழுக்கள் மற்றும் வேதாகமவகுப்புக் குழுக்களில் பங்குப்பெறும் நமது விசுவாசிகளனைவரும் வெளிசந்திப்பு ஊழியங்களிலும் உற்சாகமாக ஈடுபட ஜெபிப்போம்.

**மார்ச் 2**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. மேரி கிம் சிங்சிட்

# ஹிமாச்சலப் பிரதேசம்

## கர்சோக்:

### சுமித் குமார் தரியானி & துங்சிபெனி

**துதிக்க:** சிண்டி மற்றும் கெலோதார் பகுதிகளைச் சார்ந்த 2 விசுவாசிகளின் குடும்பங்கள் வெளிசந்திப்பு ஊழியங்களில் நமக்கு உதவி செய்கின்றனர். ஜலோதி, மும்மாயில் மற்றும் சஹாரலி பகுதிகளில் நடைபெற்ற வீடு சந்திப்பு ஊழியங்களின் மூலம் நமது விசுவாசிகள் அநேகர் தங்களது அர்ப்பணிப்பை மீண்டும் கிறிஸ்துவில் புதுப்பித்துக் கொண்டனர். மூன்று கிராமங்களில் நடந்த இரவுநேர ஜெபக்கூட்டங்களின் மூலம் விசுவாசிகளல் லாதோர் மத்தியிலும் தேவன் அற்புதக் கிரியை செய்து வருகிறமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்சாக் கிராம விசுவாசி களுக்கிடையே ஒற்றுமை நிலவ; அநேக நாட்களாகக் காணாமல் போயிருக்கும் ஜலோதி கிராம நமது விசுவாசி அமரிதேவி விரைவில் சுகப்பத்திரமாய் வீடு வந்துச்சேர; புதிதாக அநேக கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; கிராமங்களில் இருக்கும் தீய பழக்கங்களான அமானுஷ்ய பில்லிசூனியக் கட்டுகள் யாவும் முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.

## ஆனி:

### ஹின்சாவ்ம் & சிங்கோயி கிம்

**துதிக்க:** தனியார் கம்பெனி எடுத்துக் கொண்ட தனது நிலத்திற்கு ஈடாக ரூ.25 இலட்சங்களைத் தொகையாக நமது விசுவாசி பிரதாப் பெற தேவன் உதவி செய்தார். கொரோனாவிலிருந்து தேவன் நமது விசுவாசி பாலக் ராமிற்கு முழுசுகம் ஈந்தார். நமது விசுவாசிகளில் அநேகர் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நல்வளர்ச்சிக் காண தேவன் கிருபை புரிகிறார். நமது மிஷனெரியின் மகன் தீமோத்தேயு காலெலும்பு முறிவிலிருந்து நன்கு சுகம் பெற தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாரந்தோறும் ஞாயிறு ஆராதனைகளுக்கு நமது விசுவாசிகள் அதிக சிரமமின்றி வந்துப் போவதற்கு ஏற்ப நல்ல அரசாங்கப் போக்குவரத்து வசதிகள் உருவாக; ஷியாமளாவின் குடும்பப் பிரச்சனை அகல; கலோத் பகுதியில் புதிதாக ஆராதனை மையம் ஆரம்பிக்கப்பட; விசுவாசத்தில் பின் மாற்றமடைந்திருக்கும் மஞ்சுராம், சாமத் ராம், ஹிரலால், தரண்தாஸ், ருக்மணி, ஜானகி, புரலால், தத்ரு ராம், ராம்லால் ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; உயர்கல்விப் படிப்பிற்கு கிரேஸ் அகாடமியில் சேர தீமோத்தேயுவிற்கு வாய்ப்பு கிடைக்க ஜெபிப்போம்.

## மார்ச் 3

புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெயசீலி இஸ்ரேல் தேவதாஸ்
திரு. பால் ஆனந்தன் ஆர்.
திரு. ஜீவன் ரஞ்சன் மஹாபத்ரா
திரு. ஜாண் சாமுவேல் ஏ.
திருமதி. பிரஸ்துதா பட்டி பானி
திருமதி. மெர்சி எலிசபெத் சிவசங்கரன்
திரு. தாங் சின் லியன், திரு. பிரதீப் எஸ்.
திரு. காய் மின் தாங், திரு.வனபர்லா சத்தீஷ்குமார்

# பஞ்சாப்

### புத்லாடா:

### சஞ்சீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். புத்லாடா, பரேட்டா, மூணாக் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆராதனைகளையும், கமாயில் சிங் மற்றும் சரண்தாஸின் இல்லங்களில் வைத்து நடந்த சிறப்பு வெளிசந்திப்பு நிகழ்ச்சி மற்றும் சத்சங் கூடுகையையும் கர்த்தர் பலவிதங்களில் ஆசீர்வதித்துத் தந்தார். பெரும் பெலவீனத்தி னின்று லாலி சிங்கையும், விபத்தினால் ஏற்பட்ட இடுப்பெலும்பு முறிவிலிருந்து சிந்திர் கௌரையும், பக்கவாதத்திலிருந்து பாலஜித் சிங்கையும் தேவன் குண மாக்கினார். நமது விசுவாசிகளான ரீனா ராணி, நிரஜ் ஆகியோருக்கு அரசாங்க வேலைகள் கிடைக்கக் கர்த்தர் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஆராதனையில் கலந்துக் கொள்ளும் அனைவரும் இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ராலி, பாப்தி, காளிபூர், பச்சோனா, படுதா, மந்த்ரா ஆகிய கிராமங்களில் நமது ஊழியங்கள் நல்வளர்ச்சிப் பெற; பாப்தா, ஹமீர்கட், சலீம்கார், லாயில், புந்தல் பைனி, சொ்கார், பல்ரா மற்றும் சோட்டியன் கிராம மக்கள் யாவரும் இரட்சிக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான கலா சிங், பீமா சிங், ஹனுமான், கேத்தி சிங், செகஜ்பால் சிங், கர்ஷன் சிங், ஹர்பன் சிங் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

## மரணக்குழிக்குள் ஓர் தேவதூதன்!

*பஞ்சாப், பர்னாலா பணித்தளம். அங்கே ஒருநாள் நமது மிஷனெரி சகோதரரும் அவரோடு கூட ஒரு வாலிபத்தலைவருமாக இருவரும் சேர்ந்து இருசக்கர வாகனத்தில் ஊழியத்திற்குச் சென்று விட்டு, மாலை 6 மணியளவில் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். வழியெங்கும் அதிக புகைமூட்டமாக இருந்ததினால், சாலையின் வழி சரியாக அவர்களது கண்களுக்குத் தெரிய வில்லை. எனவே, எதிரில் சாலையோரம் இருந்த மரத்தின் மீது வாகனம் மோதி, மிகப்பெரிய ஆழமான குழிக்குள் வாகனத்தோடு விழுந்து விட்டனர். தலைக்கவசம் அணிந்திருந்ததினால் நமது மிஷனெரிக்குச் சேதமேதுமில்லை. ஆனால், பின்னால் அமர்ந்து வந்த அந்த வாலிபனுக்கோ நெற்றியில் அடிபட்டுப் பெரிய காயம் ஏற்பட்டது. அவர்களை அக்குழியிலிருந்து காப்பாற்ற அங்கே யாருமேயில்லை; இருளும் சூழ்ந்து விட்டது. பயத்துடன் அரைமணிநேரம் அவர்கள் செய்வதறியாது விழித்தபோது, கர்த்தர் அவருடைய தூதனைப் போன்ற ஓர் மனிதனை அங்கே அனுப்பி, அவர்களை அக்குழியிலிருந்து தூக்கியெடுத்து, மருத்துவமனையில் சேர்க்க உதவினார். இப்போது அவ்வாலிபனுக்கு சிகிட்சையளிக்கப்பட்டு வருகிறது. இதைப்பற்றி கேள்விப்பட்ட கிறிஸ்தவ நம்பிக்கையற்றோர் கூட, அவனுடைய தெய்வத்தின் பணிக்கு அவன் சென்றதினால்தான் அவனுடைய தெய்வம் அவனைக் காப்பாற்றியிருக்கிறார் என்று ஒப்புக்கொண்டனர். கிறிஸ்துவுக்கே புகழ்!*

## மார்ச் 4
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் பெர்லின் எஸ்., திரு. திம்மேஷ் எம்.பி.
திரு. கிஷாந்த லிம்மா, திரு. தினேஷ் மரையா

# ஹரியானா

## கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** ஞாயிறுபள்ளி ஆசிரியர் பயிற்சிக் கூடுகை மிகச் சிறப்பாக நடைபெற்றதோடு, கலான்வாலி திருச்சபை மற்றும் ஜாகீர் சிங் காலனி பகுதிகளில் ஞாயிறுபள்ளி ஆராதனை ஆரம்பிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். கலான்வாலி திருச்சபையில் வைத்து நடந்த உபவாச ஜெபக்கூட்டத்தைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். தருவுனா கிராம தர்ஷிமின் உறவினரைத் தீய ஆவி யின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். ஜோகி இனமக்கள் சமுதாயத்திலிருந்து புதிதாக 18 சிறுவர்கள் ஜாகீர் சிங் காலனியில் வைத்து நடக்கும் ஞாயிறுபள்ளியில் வந்து பங்குப்பெற தேவன் அநுக்கிரகம் காட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆசீர் மற்றும் கலான்வாலி மண்டியில் புதிதாக ஞாயிறுபள்ளி வகுப்புகள் தொடங்கப்பட; ஞாயிறு ஆராதனை, ஜெபக் கூடுகைகள் யாவற்றிலும் நமது விசுவாசிகள் அதிக உற்சாகத்துடன் கலந்துக் கொள்ள; கூடாரங்களில் வாழும் ஜோகி இனமக்கள் மத்தியில் தொடங்கப்பட்டிருக்கும் ஞாயிறுபள்ளி சிறப்பாக நடைபெறவும், அவ்வின மக்களின் இரட்சிப்பிற்காகவும், அதற்கென அவர்கள் மத்தியில் நடைபெறும் ஊழிய முயற்சிகளைத் தேவன் கனப்படுத்தவும்; தற்போதைய முதல் தலைமுறை கிறிஸ்தவ விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; லெந்து கால ஊழிய நிகழ்வுகளைக் கர்த்தர் ஆசீர்வதிக்கவும், கிறிஸ்துவின் கிருபாதார பலியை நமது விசுவாசிகள் தெளிவாகப் புரிந்துக்கொள்ளவும் ஜெபிப்போம்.

# உத்தரகாண்ட்

## கிச்சா:

### தாங்வாங்சாங் & சிங்கான்மாவி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத் தால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக ஒரு நபர் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடி யெடுத்து வைத்துள்ளார். தெலியாபூர் கிராம கேராசிங்கின் மனைவி ஜித்தோ கௌர் கிறிஸ்துவின் அன்பை ருசித்து அவரைப் பின்பற்றத் துவங்கியுள்ளார். தெலியாபூர் கிராமத்தில் பெண்களுக்கான ஜெபக்குழுவொன்று துவங்கப்பட்டுள்ளது. வயிற்றுத் தொற்றுக்கிருமியிலிருந்து தெலியாபூர் கிராம கேசாரி தேவியையும், சாவின் விளிம்பில் போராடிக் கொண்டிருந்த சீதாதேவியின் எருமையையும் அதன் கன்றுக்குட்டியையும் தேவன் சுகமாக்கினார். ஜெபத்தின் மூலம் நமது விசுவாசி பிம்லாவின் கணவர் ராமு பிரசாத் சூதாட்டத்திலிருந்து விடுதலை பெறவும், வேலைக்குச் சென்று சம்பாதிக்கவும் தேவன் அவருக்கு ஒத்தாசை புரிந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் அனைவரும் இரட்சிக்கப்பட; இந்திய இராணுவத்தில் இணைய நேர்காணலுக்குச் செல்லும் நமது வாலிப விசுவாசிகளான வினய் குமார், சாம்சர் மற்றும் மன்ஜித் சிங்கிற்காக; நமது ஊழியத்திற்குப் பேருதவி யாக இருக்கும் தோராடாம் கிராம நமது விசுவாசிகளான புரான்சிங் & பிம்லா கௌருக்குத் தேவன் புத்திரபாக்கியம் நல்க; தலையில் வந்திருக்கும் தோல் ஒவ்வாமை நோயிலிருந்து தேவன் சிண்டு கௌருக்குச் சுகம் கொடுக்க ஜெபிப்போம்.

## மார்ச் 5
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தங்கம்மாள் ஜெபராஜ்
திரு. டேவிட் பாண்டிங், திரு. சுனில் மேத்யூ கே.
திரு. ரவி குமார் எஸ்.
திருமதி. ஸ்டெல்லா டேவிட் பெருமாள்
திரு. சம்புநாத் நாயக், திருமதி. ருவாட்ஸி வாபெய்
திரு. லுபின் முர்மு

### பஸ்பூர்:
**கிறிஸ்டியன் பிரகாஷ் &**
**கோகனி சுமித்ராபேன்**

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளார். ராஜ்புரா கிராமத்தில் நடைபெற்ற உபவாச ஜெபக்கூடுகையைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். ரெகத்தா கிராமத்தில் முதன்முறையாக அடக்க ஆராதனையொன்றைக் கிறிஸ்தவ முறையில் நடத்த தேவன் நமது மிஷனெரிகளுக்கு உதவி செய்தார். காசநோய் மற்றும் குடற்புண் காய்ச்சலிலிருந்து சுனில் மற்றும் கோலுவையும், ஏறத்தாழ ஒருவருட தீராத வயிற்றுவலி பிரச்சனையிலிருந்து ஹர்விந்தர் சிங்கையும் தேவன் குணமாக்கினார். தாராவின் குடும்பத்திற்குத் தேவன் குழந்தை பாக்கியம் அருளியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிருஷ்ணாதேவி, ஷலோனி, பிரீத்தி தேவி ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட; ரெகத்தா கிராம நமது இளம் விசுவாசிகள் தேவ வல்லமையைத் தங்களது வாழ்வில் அனுபவிக்க; சிந்துகா, சந்தோஷ் ஆகியோர் வலிப்பு வியாதியிலிருந்தும், எந்திரேஷ் அதிகளவிலான சர்க்கரை வியாதியிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

### தினேஷ்பூர்:
**ராமசாமி ஜெரோம் &**
**அந்தோணி ராஜம்;**
**சிவகுமார் & சுசிலா மாரக்**

**துதிக்க:** புதிதாக 14 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக ஒரு குடும்பத்தினர் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்று அவருடைய ஆளுகைக்குள் வந்துள்ளனர். தேஜாஃபௌஜா கிராம ராஜ்ராணியைத் தீராத தொண்டை தொற்று பிரச்சனையிலிருந்து தேவன் குணமாக்கினார். சைதலிகஞ்ச் கிராம சுனிதா கௌருக்குத் தேவன் மழலை பாக்கியம் அருளினார். திம்ரி பிளாக்கைச் சார்ந்த நமது விசுவாசியின் சகோதரர் பிரேமைத் தேவன் பெரிய விபத்தினின்று பாதுகாத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தய்னும்பார் கிராம ராஜ் குமாரியைத் தலைசுற்றல் பிரச்சனையிலிருந்து தேவன் குணப்படுத்த; தேஜாஃபௌஜா கிராமத்தைச் சார்ந்த சாத்பாலை சூதாட்டப்பழக்கத்திலிருந்து தேவன் மனம் மாறச் செய்ய; நமது விசுவாசிகளான ஆமான் மற்றும் பவானின் திருமணக் காரியங்களுக்கான பணஉதவிகள் கிடைக்க; குடிப்பழக்கத்திலிருந்து மீள முடியாமல் தவிக்கும் சைதலிகஞ்ச் கிராம சோனுவைத் தேவன் விடுவித்து இரட்சிக்க ஜெபிப்போம்.

## மார்ச் 6
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. ஜேம்ஸ் அருள்ராஜ் எம்.

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### பி.ஜி. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** கோவிட்-19னின் பாதிப்பிலிருந்து தேவன் நமது மிஷனெரியின் குடும்பத்தைப் பாதுகாத்தார். ரிஷிராஜின் மகன் அன்மோலைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். தனலட்சுமியை மூக்கிலிருந்து கசியும் இரத்தக் கோளாறிலிருந்தும், ரட்சணாவை வலிப்பு நோயிலிருந்தும் தேவன் சுகமாக்கினார். டெல்லி பகுதிகளில் கோவிட்-19 னின் தாக்கம் அதிகமான அளவில் இன்னும் இருக்கின்றபோதிலும், இம் மட்டும் தேவன் நமது விசுவாசிகள் அனைவரையும் தீமைக்கு விலக்கிப் பாதுகாத்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேதாகம வகுப்புக் குழுக்கள் தொடங்கப்பட; நமது வாலிப விசுவாசிகள் யாவரும் ஊழியத்தில் நன்கு ஈடுபட; முகுல் கிராம ரட்சணாவை வலிப்பு வியாதியிலிருந்தும், இஷாவைக் காசநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; நமது விசுவாசிகளான சபானா சந்த், சஞ்சய் தாஸ், சிவகுமார், பரத், லட்சமி நாராயணன், தவமணி, பாப்பாத்தி, சச்சின் ஆகியோர் கடன் பிரச்சனையிலிருந்து வெளிவர; அனிதா கோபாலிற்கு வீடு கட்டுவதற்கான தேவைகள் யாவும் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## கைர்த்தல்:

### செல்வராஜ் & செல்வம்மாள்

**துதிக்க:** நட் இனசமுதாயத்திலிருந்து புதிதாக 2 நபர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். இவ்வினமக்கள் தங்களது அச்சம், சந்தேகம் போன்றவைகளிலிருந்து விடுபட்டு நமது ஆராதனைகளில் வந்து கலந்துக்கொள்கின்றனர். இச்சமுதாயத்தினரிடையே நடக்கும் இரவுநேர ஜெபக்கூடுகையினால், 6 கிராமங்களைச் சார்ந்த விசுவாசிகளல்லாதோர் மத்தியிலிருந்து சுவிசேஷத்திற்கு நல்ல தொடர்பலைகள் கிடைத்திருக்கின்றன. நகல் கிராமத்தில் நடந்த மூன்று நாட்கள் உபவாச ஜெபக்கூடுகையையும், 3 கிராமங்களில் நடந்த வேதாகம வகுப்புக்களையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பன்வெல் பகுதியில் ஒருவார காலமாகக் காணாமல் போயிருக்கும் 14 வயது நிரம்பிய இளம் வாலிபப்பெண் பத்திரமாய் விரைவில் வீடு வந்துச்சேர; இனந்தெரியாத நோயினின்று நமது புதிய தொடர்பாளர் சம்பத்தையும், கர்ப்பப்பை கோளாறிலிருந்து வினயல் மெந்திரையும் தேவன் குணமாக்க; சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டும் பாபய் கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; உள்ளூர் சாராயம் உற்பத்தியில் ஈடுபடும் தீத்தா கிராம நமது திருச்சபையினரில் பலர், தாங்கள் புதிய விசுவாசிகளுக்கு இடறலாக இருக்கும்பட்சத்தில் இச்செயலிலிருந்து முழுமையாக விடுபடவும், தங்களது ஆவிக்குரிய வாழ்வில் தெளிந்த புத்தியுடன் வளரவும் தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

## மார்ச் 7
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கில்பர்ட் வில்லியம்ஸ் எஸ்.
திரு. சாலமோன் ஞானசேகர் ஜே.
திரு. தாங் கொ லுன் கிப்ஜென்
திரு. ஜாண் அருள்ராஜ்
திரு. தாங்மின் தாங் கிப்ஜென்
திருமதி. லியான்பியக்னெமி சிங்

### பாவோட்டா:
**சத்திய பிரகாஷ் & அஞ்சனா மஸிஹ்**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவி சேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. பாவோட்டா கிராமத்தில் கர்த்தரின் ஊழியம் எல்லாப் பகுதிகளிலும் வளர்ந்துப் பெருகுகிறது. பாய்ஸ்லானா கிராம ராம்சிங்கிற்கு கல்லீரல் தொற்று நோயிலிருந்து தேவன் தந்த சுகத்திற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாய்ஸ்லானா மற்றும் முண்ட வாறா பகுதி திருச்சபைகளிலுள்ள மூப்பர் கள் தங்களது சபை ஆராதனைகளில் தலைமைப் பொறுப்பெடுத்து நடத்த; கோட்புட்டாலி கிராம ரீனாவிற்கு கழுத்து சுரப்பி (தைராய்டு) பிரச்சனையி லிருந்தும், சாந்திக்கு அதிக இரத்தப் போக்கிலிருந்தும் பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### உதய்பூர்:
**சுனில் குமார் வசாவா & பீனாக்ஷி**

**துதிக்க:** மசிங்புரா, ஷேரா ஆகிய கிராமங் களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. ஆறு இடங்களில் நடந்த இரவுநேர ஜெபக்கூடுகைகளைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். நமது வெளிசந்திப்பு ஊழியத்தின் மூலம் கிட்டத்தட்ட 100 எண்ணிக்கையளவிலான மக்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து முதன்முதலாகக் கேள்விப்பட்டுள்ளனர். ஹன்னா, மிர்கி, கல்பனா ஆகியோரை இனந்தெரியாத நோய்களிலிருந்தும், கங்காபேனைக் கால்வலியிலிருந்தும், பெர்கிபேனை வயிற்றுவலியிலிருந்தும் தேவன் சுகப்படுத்தினார். நமது விசுவாசி சிவா லாலுக்கு கிறிஸ்தவ குடும்பத்தி லிருந்து நல்ல வாழ்க்கைத்துணை கிடைக்கத் தேவன் பாராட்டிய நன்மைக் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டிருப் போர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள; உதய்பூர் பணித்தள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும் பவும், சுவிசேஷ வாசல் அப்பகுதி யில் தடையின்றி திறக்கப்படவும்; கெமிபேனைத் தேவன் கண்பார்வை பிரச்சனையிலிருந்து குணப்படுத்த; நமது விசுவாசி ஜாமன்லால் குடும்பம் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக் கப்பட; சோம், கரல் ஆகிய கிராமங்களில் குடிப்பழக்கத்தினால் அடிக்கடி சண்டை யிட்டுக்கொள்ளும் இம்மக்கள் இரட்சிக் கப்பட ஜெபிப்போம்.

**மார்ச்** திங்கள் **8**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஹமுவேல் லிம்மா

### சாங்ரியா: பவுலோஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ

**துதிக்க:** புதிதாக ஷர்வாலா, சாஹித்வாலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நாக்ரானா திருச்சபையிலிருந்து ஒரு குடும்பத்தினர் தன்னார்வமாக முன்வந்து அவர்களது திருச்சபையினருக்கு உணவு வழங்கவும், வேத வசன அட்டைகளை விநியோகிக்கவும் தேவன் உதவி செய்தார். நமது விசுவாசி கௌர் சிங்கின் மகள் பிரியங்காவின் திருமணவிழா கிறிஸ்தவ முறையில் சிறப்பாக நடந்தேறியது. தோடிவாலா கிராம மஜுவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான தோலாசாக் கிராம ராமன்தீப், நாக்ரானா பகுதி ரீட்டு, பிரதாப்புரா பகுதி புராபகத் சிங் மற்றும் சுக் சின் கௌர், தோதிவாலா பகுதி குஷ்மீத் கௌர், ராணிவாலா பகுதி மன்ஜீத் கௌர், சரண்தீப் கௌர் மற்றும் லவ்பீரீத் சிங், 16 சாக் நிலாம் பகுதி ஹர்பிந்தர் மற்றும் பல்வீர் கௌர் ஆகியவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நர்பூரா கிராம ராணி கௌரை அதிகமான இடுப்பு வலியிலிருந்தும், கிரண் கௌரை வயிற்றுக்கட்டியிலிருந்தும், பிரதாப் புரா கிராம சீத்தாராமைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்தும் தேவன் விடுவித்து சுகப்படுத்த ஜெபிப்போம்.

### கோர்வாடா: பட்டேல் தேவுபாய் & ஜமுபேன்

**துதிக்க:** தபிலா என்ற கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. கோவிட்-19னிலிருந்து நமது விசுவாசி ஹரா சீத்தாபேனையும், மலேரியா காய்ச்சலிலிருந்து காந்தி, சீமா, பூமிகா, மிகிர் ஹன்ஜு, பாபு வாகி, ஹக்காரா, சஞ்ஜய், ஹீனா ஆகியோரையும் கர்த்தர் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கத்வா, பிரபு, தினேஷ் மற்றும் ரமேஷின் இரட்சிப்பிற்காக; நீலம், துர்கா, ஷர்மிளா ஆகியோருக்குச் சுகப்பிரசவம் நிகழ; நமது விசுவாசிகளான நீல் மற்றும் புரபினாவிற்குக் குழந்தை செல்வங்கள் கிடைக்க; காதுகேளாமையிலிருந்து தேவன் மகேந்திராவை அற்புதமாகக் குணமாக்க ஜெபிப்போம்.

## *மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்!*

*ஒடிசா, பல்லகாரா பணித்தளம், மமலபோஷி கிராமத்தலைவரின் மகன் முக்கோமன் ஜுவாங். இவர் ஒருநாள் ஜெபஐக்கியத்திற்கென கூடியிருந்த நமது விசுவாசிகளைக் கண்டு மிகுந்த ஆத்திரமடைந்து கத்தினார். அவர்களுக்குத் தொலைவில் நின்று கடும் மோசமான வார்த்தைகளினால் அவர்களை வசை பாடினார். இதனைக் கண்ட நமது ஊழியர், அவரிடம் சென்று வந்தனம் கூறி, அவரைக் கட்டித் தழுவி, அவரது கோபத்திற்கான காரணத்தை மெதுவாகக் கேட்டார். உடனே, அக்கிராமத்தலைவரின் மகனுடைய மனம் மாறியது. பின்பு தான் அவ்வாறு தவறாக நடந்துக்கொண்டதற்காக ஊழியரிடம் மன்னிப்புக் கேட்டு, அமைதியாகத் திரும்பிச் சென்றார். அதன்பின் நமது விசுவாசிகளின் ஜெபஐக்கியக்கூட்டம் சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் நடந்து முடிந்தது. தேவனுக்கே மகிமை!*

## மார்ச் 9
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வசந்தி ஸ்டெல்லா இம்மானுவேல்
திருமதி. பொன்னுத்தாய் ஞானசுந்தரி ஆர்தர்
திரு. டேவிட் பி., திருமதி. பிரவதிமணி வினோத் குமார்

# உத்தரப் பிரதேசம்

### சிக்கந்ரா & பாக்ய நகர்:

**பொன்னுசாமி & சித்ரா**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆறு இடங்களில் நடந்த இரவுநேர ஜெபக்கூடுகைகளையும், பல இடங்களில் தனித்தனியே வாலிபர்கள், விசுவாசிகள் மற்றும் பெண்களுக்கென நடந்த கூடுகைகளையும் தேவன் ஆசீர் வதித்துத் தந்தார். 44 கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகள் சிறப்பாக நடந்தன. நேப்ளாபூர் கிராமத்தில் முதன்முதலாக அடக்க ஆராதனை கிறிஸ்தவ முறையில் எதிர்ப்பின்றி நடந்தது. ஷியாம் நாராயன் & அனிதா என்ற சுதேச ஊழியரின் குடும்பம் நமது ஊழியத்தில் புதிதாக வந்து இணைய தேவன் உதவிப்புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கான்ஜார் மக்கள் கூட்டம் மத்தியில் வைத்து நடைபெறப் போகும் நாராயன்பூர் பகுதி சிறப்புக்கூடுகையைத் தேவன் ஆசீர்வதித்துத் தர; அரசு விதி களின்படி அவுரியா, திபியாபூர், சிக்கந்ரா ஆகிய இடங்களில் இருக்கும் சமிதிக்கு வங்கி கணக்கு தொடங்கப்பட; சைபர் க்ரைம் மூலம் ரூ.41,000/- ஐ தொலைத்து விட்ட நமது விசுவாசி சர்வானுக்காக; ரணியா, புக்கராயணா, சிக்கந்த்ரா ஆகிய இடங்களில் நடக்கவிருக்கும் மூப்பர்களின் பயிற்சிக்கூடுகை மற்றும் புதிய கிராமங்களில் நடைபெறப்போகும் வெளிசந்திப்பு, இயேசு திரைப்படம் போன்ற ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதித்துத்தர ஜெபிப்போம்.

### ஜின்ஜக்:

**சமரேந்திர சிங் & சுஸ்மித்தா**

**துதிக்க:** புதிதாக 45 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்து வின் அன்பிற்குள் அடைக்கலமாகி யுள்ளனர். கிறிஸ்துவின் மீது தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ள சாமுதி மற்றும் அவரது மகள் சாம்னா ஆவிக்குரிய வாழ்வில் வளர தேவன் ஒத்தாசை புரிகிறார். ஜின்ஜக் போலாநகர் திருச்சபையில் நடந்த சபை மூப்பர்களின் பயிற்சிக்கூடுகை மற்றும் 12 கிராமங்களில் நடந்த இரவுநேர ஜெபக்கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். அனந்தபுரா கிராம நமது விசுவாசியின் மகனுக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்தது. தேராபூர் துணைமையத்திலுள்ள நட் மற்றும் மன் சுவாரா இன மக்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். லகதா கிராம ஹோஷிஷ் சந்தைத் தேவன் தீராத வயிற்று வலியினின்று சுகப்படுத்தியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிசந்திப்பு ஊழியம் நடந்த இடங்களிலெல்லாம் நடக்கப்போகும் பின்தொடர்பணி ஊழியம் ஆசீர்வதிக்கப்பட; இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகை, விசுவாசிகள் பயிற்சிக்கூடுகை, பெண்கள் பயிற்சிக் கூடுகை மற்றும் சுதேச ஊழியர்களின் குடும்பப் பயிற்சிக்கூடுகை யாவற்றின் மூலமும் தேவன் நமது அனைத்து விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வைப் பெலப்படுத்த; மோய்கி, போரோச், சாக்கிபூர்வா, லோஹிகாபூர்வா மற்றும் பாதவால் பகுதிகளிலுள்ள நமது புதிய தொடர்பாளர்கள் கர்த்தருக்குள் வளர; தேவராஜ்யத்தைக் கட்டும் பணியில் நமது வாலிப விசுவாசிகளும், சுதேச ஊழியர்களும் ஆத்தும பாரம் கொண்டு செயல்பட ஜெபிப்போம்.

## மார்ச் 10

புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. செல்வகுமார் @ ஜோசப் வில்சன்
செல்வி. புரோமிளா சோரேன்
திருமதி. ஷர்மிளா சத்தீஷ்

### கைம்கஞ்ச்:

**எபநேசர் ஜி. சாம் & ஜெபராணி**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளது. காம்பிள் கிராம நமது விசுவாசி ராஜ்பால் அநேக வாரங்களுக்குப்பின் மீண்டும் ஞாயிறு ஆராதனைக்கு வந்தார். அதிக குளிரின் மத்தியிலும் காம்பிள் கிராம ஆலய ஆராதனையில் கடியா ஜகநாத் கிராம நமது விசுவாசி மனோஜ் கலந்துக்கொண்டார். சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்ட லால்பூர் கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட்டுள்ளது. ஃப்ருக்காபாத் பிராந்தியளவிலான ஓட்டப்பந்தயத்தில் காம்பிள் கிராம நமது விசுவாசிகளான சப்னா மற்றும் விவேக் வெற்றி வாகை சூட தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடியா ஜகநாத் கிராம மனோஜ், தும்தேரா கிராம ராஜேந்திரா, அஜம்பூர் கிராம ஆனந்த் ஆகியோரின் குடும்ப மக்கள் யாவரும் இரட்சிக்கப்பட; பிரித்வி தர்வாஜா கிராம ரிங்கியைத் தேவன் முழுமையாகக் காதுவலியிலிருந்து விடுவிக்கவும், இவர் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்; விமானப்படையில் சேர நுழைவுத்தேர்வு எழுதப்போகும் அலிகன்ஜ் கிராம நமது விசுவாசி சோபித் நல்ல மதிப்பெண்கள் பெற்று, அரசாங்க வேலையைப் பெற; அதிக குளிரின் மத்தியில் நடைபெறும் வாரஇறுதி வேதாகம வகுப்புகள், ஜெபக்குழுக்கள் தடையின்றி வாரந்தோறும் நடைபெற; லிஜோரி, அஜம்பூர், காம்பிள் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் வாலிபர்களும், சிறு பிள்ளைகளும் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### கான்பூர் பிராந்தியம்:

**ஸ்ரீனிவாசன் & ஷீபா**

**துதிக்க:** புதிதாக 23 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். 19 கிராமங்களில் நடந்த ஜீப்குழு ஊழியங்களைத் தேவன் அநேகருக்கு ஆசீர்வாதமாக்கிக் கொடுத்தார். பிந்திகி திருச்சபையைச் சார்ந்த சபை மூப்பர் நரேஷ் குமாரைத் தேவன் பெரிய விபத்தினின்று பாதுகாத்தார். சிறுநீரகக்கல் நீக்கம் அறுவை சிகிட்சை செய்திருந்த நமது மிஷனெரி கஹாமின்தாங்கைத் தேவன் சுகப்படுத்தினார். சுவிசேஷத்தின் மீது அதிக வாஞ்சை காட்டும்படியாகக் கேவத் இனமக்களுக்குத் தேவன் காட்டிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹசரேன் என்ற இடத்தில் நடக்கவிருக்கும் ஜீப்குழு ஊழியத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், அக்குழுவினரின் பாதுகாப்பிற்காகவும்; பஸ்தி, சிக்கந்த்ரா ஆகிய இடங்களில் நடக்கப்போகும் சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகைகளைத் தேவன் மிகுந்த பயனுள்ளவைகளாக மாற்றித் தர; 20 இளம் தம்பதியினருக்கு 2-ம் தலைமுறை தலைவர்களை உருவாக்க காட்டம்பூர் பணித்தளத்தில் வைத்து நடைபெறப்போகும் தலைவர்கள் பயிற்சிக்கூடுகைக்காக; தனது சிறுநீரகப் பிரச்சனைக்காக CMC- யில் சிகிட்சை பெற்றுவரும் ஷியாமளா மத்தேயு பூரணமான சுகம் பெற; சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் நட், கேவத், பால், கன்சாத், கேத்ரியா ஆகிய மக்களினங்களின் ஒட்டு மொத்த இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## மார்ச் 11
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் செல்வராஜ் சி.
திரு. பிரவீன் தாஸ்
திரு. சத்திகாந்த் பரிச்சா

### பஸ்தி : பும்சோன்சின் & லுன்சிங்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பறைசாற்றப் பட்டுள்ளது. சுமன், சவ்தி, ஷர்மிளா ஆகியோர் பிசாசுகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றனர். ஊரடங்கு காலக் கட்டத்திலும் அயராது தேவப்பணி செய்த நமது தன்னார்வ ஊழி யரைத் தேவன் எவ்விதத் தீங்கும் அண்டாதபடி பாதுகாத்தார். தய்சாத் கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப் பட்டதோடு, அதிகமானோர் சுவிசேஷத் திற்குச் செவிசாய்க்கவும் நமது ஆலய ஆராதனைகளில் பங்குப்பெறவும் தேவன் கிரியை செய்துவருகிறமைக் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளான சீமா, நிர்மலா மற்றும் முரளிக்குத் தேவன் மழலை பாக்கியங்களை அருள; சப்தியா பகுதி திருச்சபையின் வளர்ச்சிக்காக; மனநிலை பாதிப்பினால் தனது குழந்தைகளைக் கூட அடை யாளம் கண்டுபிடிக்க இயலாமல் தவிக்கும் தய்சாத் கிராம மாலா விற்காக; அதிசயங்கள் மற்றும் உலக ஆசீர்வாதங்களுக்காக மாத்திரம் ஆலயத்திற்கு வராமல், கிறிஸ்துவில் உறுதியான அன்பும் விசுவாசமும் கொண்டு நமது புதிய விசுவாசிகள் ஆராதனையில் பங்குப்பெற ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### நிவாலி:

**சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. ஜண்டயாமகால், ஜண்டியாகுண்டாய், வால்யாபானி, டோங்ராகான் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற வெளி சந்திப்பு கூடுகைகளைத் தேவன் அநேக மக்களுக்கு ஆசீர்வாதமாக்கிக் கொடுத்தார். சாட்டாலி கிராம நமது விசுவாசி பபிதாபாயிற்குத் திருமண மாகி 5 வருடங்களுக்குப்பின் தற்போது மழலை பாக்கியம் கிடைத்துள்ளது. வஜார் கிராமத்திலிருந்து ஒரு குடும்பமும் வேறு பிற இடங்களிலிருந்து இரண்டு குடும்பங்களும் புதிதாக நமது சபை ஆராதனையில் தவறாது பங்குப்பெறு கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபையில் இணைவதற்கு முன் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்து வில் அறிக்கையிடக் காத்திருக்கும் நமது கோலியாபானி விசுவாசிகளுக்காக; தொழிலின் நிமித்தம் இடம்பெயர்ந்துச் செல்லும் நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு கிறிஸ்துவில் பாது காக்கப்பட; வரும்நாட்களில் நடக்கவுள்ள அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்போம்.

## மார்ச் 12
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷைனி கின்ஸ்லி

### கர்கோன்: சாமுவேல் மராண்டி, ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** புதிதாக 12 கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 10 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ஹட்டோலா, எக்சாபூர் ஆகிய இடங்களில் ஆராதனை மையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. அனிதாவைத் தேவன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தார். ஜெபத்தின் மூலம் காச நோயிலிருந்து தேவன் ரோஸ்ரியைச் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹிமர்புரா, தவாலா, குத்வா, சாங்வி, பிப்பள்கேடா ஆகிய கிராமங்களில் புதிய திருச்சபைகள் உருவாக; நமது விசுவாசிகளின் கடன்பிரச்சனைகள் தீர; ரமேஷ், அர்ச்சனா, சுரேஷ் ஆகியோருக்குக் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; ராஜி மாஜியைத் தேவன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்க ஜெபிப்போம்.

### கோராடுங்ரி:
**எஸ். ரவி & சாரோன் ரோஸ்**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் கிறிஸ்துவின் அன்பு நற்செய்தியாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. பின்மாற்றமடைந்திருந்த பெத்துல் கிராம நமது விசுவாசி பவுவா மீண்டும் ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளார். பஸ்னியா பகுதி ஆராதனையில் நமது புதிய தொடர்பாளர் சுனிதா தவறாமல் பங்குப்பெறுகிறார். நமது பெத்துல் கிராம ஜெபக்கூடுகையில் ராதா, ரகியா, தீனா ஆகியோர் புதிதாக இணைந்துள்ளனர். கோடாங்கிரி பகுதி நமது இளம் விசுவாசிகள் வேதாகம வினா-விடை நிகழ்ச்சி மற்றும் வாலிபர் கூடுகைகளில் ஒழுங்கும் கிரமமாகப் பங்குப்பெறுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்திருக்கும் பெத்துல் கிராம நமது விசுவாசி பூரிகண்ணு தனது பாவ பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு, மீண்டும் நமது ஆலய ஆராதனைக்கு வருகை தர; அதிக வீட்டு வேலைப்பளுக்களின் மத்தியிலும் நமது விசுவாசி புலந்தி பரலால் சபை ஆராதனையில் தவறாமல் வந்து கலந்துக்கொள்ள; பெடிதானா கிராம மோனா ஜோதிஷ் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

### *யாரால் கூடும்?*

*ஹிமாச்சலப் பிரதேசம், கர்சாக் பணித்தளம், ஜால்தி கிராமத்தில் நமது விசுவாசி ஜெய்ராம் தனது நிலத்தின் ஒரு பகுதியை ஆலயம் கட்டுவதற்கென கொடுத்ததோடு, அவரே அனைத்து விசுவாசிகளின் நலன் கருதி, தனது சொந்த பணத்திலேயே அத்தேவாலயத்தைக் கட்டவும் தொடங்கினார். ஆனால், அவரது நிலத்திற்கு அருகில் வசிப்பவர் அந்த நிலத்தை அபகரிக்கத் திட்டமிட்டு, அவர் மீது பொய் வழக்கைப் போட்டு விட்டார். உடனே, ஜெய்ராம் அனைத்து விசுவாசிகளையும் கூடிவரச் செய்து, அக்காரியத்திற்காக யாவரும் போராடி ஜெபித்தனர். அதன் விளைவு, நீதிமன்றம் ஜெய்ராமிற்கு சாதகமாகத் தீர்ப்பளித்து, ஆலயம் கட்டுவதற்கான சிறப்பு அனுமதியையும் ஈந்தது. ஆம்! கர்த்தர் நம் பக்கத்திலிருக்கும்போது, நம்மை எதிர்க்க யாரால் கூடும்? கர்த்தருக்கே மகிமை!*

## மார்ச் 13
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஹுட்டோயி அச்சுமி கே.
திரு. ஏசு பிரகாஷ் ஜே.

### உதய்நகர்:
**டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா**

**துதிக்க:** முதன்முறையாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்துள்ளனர். அநேக புதிய நபர்கள் நமது ஆலய ஆராதனையில் கலந்துக்கொண்டு, முதன்முறையாக தங்களது வாழ்வில் கிறிஸ்துவின் அன்பை ருசித்து வர தேவன் தருகின்ற கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிசான்கட், கேவடியாபானி, அன்சான், குத்ஹாட் ஆகிய பகுதிகளில் ஜெபக்கூடுகைகள் துவங்கப்பட; வெளிசந்திப்பு ஊழியங்கள் நடைபெற்ற 10 கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியம் நடைபெற; மாலுச் பூரு பகுதிகளில் வாழும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனம்மாற; இரவன், காசிவான், பாபுலால், பவன் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; கண்பார்வையின்மையில் இருந்து சுனிலாவையும், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து லக்கனையும், மனநோயிலிருந்து ரவீரையும் தேவன் அற்புதமாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

### தார்:
**கருணாகர் கர்டா & கீதாஞ்சலி பெஹெரா**

**துதிக்க:** பத்லியா, பாக்தி ஆகிய இரு கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி உரைக்கப்பட்டுள்ளது. பாக்தி மற்றும் பத்லியா கிராமங்களில் நடந்த ஊழியப்பின்தொடர் பணிகளைத் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். தார், கத்திர், கக்ரியா ஆகிய இடங்களில் நடைபெற்ற உபவாச ஜெபக்கூடுகைகளில் அநேகர் தேவ வல்லமையையும், அவருடைய அன்பையும் ருசித்தனர். புவான் சிங், லட்சுமி, ஆஷிஷ் ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகின்றனர். தார் மற்றும் கக்கர்தா பகுதிகளில் வைத்து நடைபெறும் ஜெப ஐக்கியத்தில் புதிய நபர்கள் வந்து கலந்துக்கொள்கின்றதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்லியா, பாக்தி, படாதி ஆகிய இடங்களில் ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட; ரத்தன்புரா, கக்ரியா, லப்ரியா ஆகிய இடங்களிலிருந்து தவறாமல் நமது ஆராதனைக்கு வருகை தரும் மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கத்திர், கந்தா போன்ற இடங்களில் பெண்கள் கூடுகைகள் நடத்தப்பட; கத்திர், மட்டிபுரா, தார், கக்ரியா, லப்ரியா ஆகிய கிராமங்களில் விரைவில் சிறுவர் கூடுகைகள் நடத்தப்பட; சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டும் பிரகாஷ் மற்றும் அனிலின் குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## மார்ச் 14
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செல்லக்கனி ஆசீர்வாதம்
திருமதி. எலிசபெத் டேவிட், திரு. வியாசு பாபு ஏ.
திருமதி. உங் தியான்சிங்தாங்

# ஜார்க்கண்ட்

### லால்மட்டியா:

**அமரேந்திரன் & சுவேதா**

**துதிக்க:** ஹர்கட்டா கிராமத்தில் புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 4 வாலிபர்கள், 2 தன்னார்வ ஊழியர்கள், ஒரு சபை மூப்பர் மற்றும் நமது ஊழியரின் குடும்பம் என மொத்தம் 9 நபர்களாக ஏழு நாட்கள் உபவாசித்து ஜெபித்தபோது, தேவன் தமது வல்லமையினால் ஒவ்வொருவரையும் நிறைத்ததோடு, தமது அற்புத கிரியைகளையும் காணும்படி செய்தார். மேலும் அநேக கிராமங்களிலிருந்தும் ஏராளமான சுகவீனர்கள் அந்த உபவாச ஜெபத்தில் கலந்துக்கொண்டு, தேவ தொடுதலை உணர்ந்தனர். பிற ஜனங்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வருவதில் நமது விசுவாசிகள் அதிக முனைப்புடன் செயல்படுகின்றனர். கருசிதைவினால் 14 நாட்கள் இரத்தப்போக்கினால் கஷ்டப்பட்ட பூனமியையும், மனநிலை கோளாறினால் அவதிப்பட்ட சஞ்ஜய் டுடுவையும் தேவன் சுகப்படுத்தினார். லால்மட்டியா பணித்தள ஊழியத்தில் தன்னார்வமாகப் பணிசெய்ய ஷியாம்லால் முன்வர தேவன் கிருபை புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் இருதயங்களில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக; நமது ஊழியத்தின் விரிவாக்கத்திற்காக கொட்டா பகுதியை ஆய்வு செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள மஹகமா பகுதியில் அமைந்துள்ள பெல்திகிரி கிராம மக்கள் மத்தியில் சுவிசேஷம் கொண்டுச் செல்ல தேவன் நமக்குத் தந்திருக்கும் புதிய தொடர்பாளருக்காக; நமது ஆராதனைகளுக்கு ஒழுங்காக வராமலிருக்கும் முனிலால் கிஸ்கு மனம் மாற; ஃபுல்படியா பகுதியிலுள்ள பாராபந்த், பாபூன், துளசிபூர் மற்றும் தெலோ தோனி கிராமங்களில் திருச்சபைகள் உருவாக ஜெபிப்போம்.

### *மரத்தில் தங்கிய தங்க மோதிரம்!*

*மகாராஷ்டிரா, கம்மன் பணித்தளம், இப்பூர் கிராமத்தில் தொட்டையா ரெட்டி என்ற 60 வயதான முதியவரொருவர் கோவிட்-19னால் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்பு கர்த்தருடைய கிருபையால் ஓயாத ஜெபத்தின் மூலம் சுகமாகி, வீடு வந்து சேர்ந்தார். அதற்கு கர்த்தருக்கு நன்றி செலுத்தும்வண்ணம் தனது வீட்டில் ஸ்தோத்திர கூட்டமொன்று நடத்தினார். அதில் கர்த்தர் தன் வாழ்வில் செய்த பல நன்மைகளை நினைவுகூர்ந்து அதில் ஒன்றைக் கர்த்தருக்குச் சாட்சியாக அறிவித்தார். அது என்னவெனில், கடந்த 3 வருடங்களுக்கு முன் அவருடைய மனைவி ரூ.30,000/-த்திற்கு மதிக்கப்பெறும் ஓர் தங்க மோதிரத்தைத் தொலைத்துவிட்டார். அதன்பின் இரண்டுமுறை அவருடைய வீடு கோதாவரி ஆற்றுவெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பட்டது. ஆனால், நடந்த அதிசயம் என்னவென்றால், 3 வருடங்களுக்குமுன் என்றோ தொலைந்த அத்தங்க மோதிரம் அவரது வீட்டிற்கு சற்றுத் தொலைவிலுள்ள ஒரு மரத்தில் பத்திரமாகத் தங்கியிருந்ததைச் சமீபத்தில் ஒருநாள் கண்டெடுத்தனர். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!*

## மார்ச் 15 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஞானம்மாள் கிறிஸ்டோபர்
திருமதி. அருணா கிங்ஸ்லி
திரு. ஸ்டாலின் ஜீவா என்.
திருமதி. பரஞ்ஜோதி லூசினா சுப்ரமணியன்
திருமதி. ஏஞ்சலின் வசந்தி இளங்கோவன்
திரு. ஹிஜாம் கென்னடி சிங், திரு. ராஜன் எஸ்.

### பாக்குடியா: இம்மானுவேல் முர்மு & நிலா ஹன்ஸ்தா

**துதிக்க:** புதிதாக 25 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 400 நபர்கள் வெளிசந்திப்பு ஊழியம் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். புதிதாக 22 நபர்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். எல்லாத் திருச்சபையினரும் தசமபாக காணிக்கைகளை ஒவ்வொரு மாதமும் படைப்பதற்கென உற்சாகப்படுத்தப்பட்டுள்ளனர். பல இடங்களில் நடைபெற்ற வாலிபர் நிகழ்ச்சி, சிறிய ஜெபக்குழு, விசுவாசிகளின் கூடுகை, சபை மூப்பர்களின் கூடுகை, முழுஇரவு ஜெபக்கூடுகைகள் அனைத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எல்லாத் திருச்சபைகளிலும் சபை மூப்பர்கள் கூடுகை, எல்லாப் பகுதிகளிலும் ஞாயிறு ஆராதனை மற்றும் எல்லாக் குருசேகரங்களிலும் விசுவாசிகள் கூடுகை என அனைத்து கூடுகைகளும் தவறாமல் நடத்தப்பட; அனைத்து விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; எல்லாத் திருச்சபைகளும் தவசு கால ஜெபநாட்களை அர்த்தமுள்ளதாக அனுசரிக்க; சமீபத்தில் மரித்துப்போன நமது சபை மூப்பர் லூக்சா முர்முவின் குடும்பத்தினருடைய மன ஆறுதலுக்காக; சபை மூப்பர்களின் நல்லாவிக்குரிய தரத்திற்காக; பாஸ்பஹாரி, பதாபஹாரி, பென்தரா, ரோலாகிராம், பொர்லாங் மற்றும் தோஹதங்கா பகுதிகளில் ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

### தல்பும்கட் விடுதி: வகேரா பிரமோத் குமார் & ஜஷோதாபேன்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. அதிக காலஇடைவெளிக்குப்பின், மீண்டும் விடுதியைத் திறக்க தேவன் உதவிப் பாராட்டியுள்ளார். நமது விடுதியில் தங்கி 10-ம் & 12-ம் வகுப்புகள் பயிலும் பிள்ளைகள் துணைப்பயிற்சி கல்வி வகுப்புகளிலும் (tuitions) இணைந்து கல்வி கற்க தேவன் உதவி செய்துள்ளார். நமது விடுதிக்குப் பொறுப்பாக ஒரு புதிய குடும்பம் பணியமர்த்தப்பட்டிருக்கிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பக்ராகோச்சா கிராம ஆலயக்கட்டுமானப்பணி மீண்டும் தொடங்கப்பட; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்ய உள்ளூர் சுதேச ஊழியரொருவர் விரைவில் கிடைக்க; பக்ராகோச்சா கிராமத்தில் கண்இமைகள் மூடப்பட்ட நிலையிலேயே இருக்கும் ஒரு சிறுவனுக்குத் தேவன் அற்புதம் செய்ய; சுந்தர்தி திருச்சபையின் சபை மூப்பர்கள் மற்றும் சபைக்குழு அங்கத்தினர்களிடையே அன்புடன் கூடிய ஒற்றுமை நிலவ ஜெபிப்போம்.

## மார்ச் 16
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எக்டோ சோஃபி
திருமதி. அனிமோல் ஜேக்கப்
திருமதி. ஆக்னஸ் எபநேசர் எட்வர்ட்

### சாந்தனா விடுதி:
### கதின்ஜின் வய்ஃபேய், மெலடி டிம்சோடிங்

**துதிக்க:** 4 இடங்களில் நடந்த இயேசு திரைப் பட ஊழியங்களையும், பல இடங்களில் நடைபெற்ற சிறுவர் ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். அதிக காய்ச்சலிலிருந்து சாமுவேல் கிஸ்குவைத் தேவன் குணப்படுத்தினார். நமது விடுதிச் சிறுவர்கள் நன்கு கல்வி கற்க தேவன் ஞானம், புத்தி கொடுத்து வருகிறார். பலவிதங்களில் உள்ளூர் ஜனங்களும் நமது ஊழியத்திற்கு ஒத்துழைப்பு தரு கின்றதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விரைவில் பள்ளிகளும் விடுதி களும் முழுமையாகத் திறக்கப்பட்டு, பிள்ளைகளுடைய வருங்கால கல்வி நிலைமைகள் கர்த்தரால் பெரிதும் ஆசீர் வதிக்கப்பட; எல்லாவித தாலந்து திறமை களைக் கொண்டவர்களாக நமது விடுதிப் பிள்ளைகள் வளர்ந்து வர; விடுதியிலிருக்கும் மூத்த மாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்வைக் கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்க; இவ்விடுதியின் நிலப்பிரச்சனை சுமூகமாக முடிவடைய; 10-ம் வகுப்பு அரசாங்க பொதுத்தேர்விற்கு ஆயத்தமாகும் லாரன்ஸ் டுடு, அனில் ஹெம்ரோம், அபிகா மராண்டி, திலீப் கிஸ்கு, தினேஷ் முர்மு, ரூபன் மராண்டி மற்றும் சல்பத் ஹத்தாவிற்காக ஜெபிப்போம்.

### தெலோ: பால்ராஜ் & ஜெபஜோதி

**துதிக்க:** புதிதாக 29 நபர்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்துள்ளனர். கௌரிபூரில் வைத்து நடைபெற்ற ஸ்தோத்திர கூடுகையைத் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்ததோடு, அதில் ஏறக்குறைய 600 நபர்கள் பங்குப்பெறவும் உதவி செய்தார். மோங்ரா கிராம சாம்சன் கர்த்தருடைய அற்புத கிரியையைத் தனது வாழ்வில் கண்டதின் மூலம் அவர் இயேசுவின் அன்பை ருசிக்கவும் அவருடைய முழு குடும்பமும் இரட்சிப்படையவும் கர்த்தர் கிருபை நல்கினார். பகத்பூர் கிராம புலின் கிஸ்கு, கோர்திஹா கிராம ஹோப்னா கிஸ்கு ஆகியோர் மூளை மலேரியா மற்றும் குடற்புண் காய்ச்சல்களிலிருந்து பூரண சுகமடைய தேவன் தயவு செய்தார். தோம்தி, பாஸ்கோ, மந்துவா, பஹாபந்த் மற்றும் ராணிதிஹ் பகுதிகளில் நடந்த விசுவாசிகளின் கூடுகைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 2021 மார்ச் 9,10,11-ம் தேதிகளில் நடைபெறவுள்ள பணித்தள அளவிலான ஆவிக்குரிய மாநாடு எத்தடையுமின்றி சிறப்பாக நடத்தப்படவும், 2000-க்கும் மேற்பட்டோர் அதில் கலந்துக்கொண்டு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவும்; ரங்மத்தியா, தல்ஜாரி, பாஹா மற்றும் பிசான்பூர் கிராமங்களில் இயேசுவின் நற்செய்தியைக் கேட்டிருப்போர் யாவரும் இரட்சிப்பின் அனுப வத்தைப் பெற; கப்லாய் கிராம மஞ்ஜிகி ஹன்ஸ்தக்கை மனநோயிலிருந்தும், பாரமசியா கிராம எஸ்தர் மாதையாவைக் காசநோயின் பிடியிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; கௌரிபூர் கிராம சரோஜினி டுடுவிற்குத் தேவன் சுகப்பிரசவம் நல்க; இந்துவா, கோர்திஹா, ராணிதிஹ் ஆகிய கிராமங்களில் நடைபெறும் ஆலயக்கட்டு மானப்பணிகளும், பாகுமுண்டி பகுதி யில் கட்டப்பட்டு வரும் சுற்றுச்சுவர் கட்டு மானப்பணியும் சுமூகமாக முடிவடைய ஜெபிப்போம்.

## மார்ச் 17
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. செல்வராஜ் ஏ.
திருமதி. சவிதா தேவி

### சந்தால் சீஷத்துவ பயிற்சி ஊழியம்: சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** நமது மிஷனெரிகளையும், சுதேச ஊழியர்களையும் மற்றும் விசுவாசிகளையும் தேவன் அதிக குளிரின் தாக்கத்திற்கு விலக்கிக் காத்தார். புதிய மிஷனெரிப் பயிற்சியாளர்களான அனிஷா, ஹெலன், ஸ்ரீஜா ஆகியோர் பணித்தள மிஷனெரிப்பயிற்சிக்கென நியமிக்கப் பட்டுள்ளனர். நோனிகட் மற்றும் சிக்காரி பாரா போன்ற பணித்தளங்களில் முதல் முறையாகத் திருச்சபைகளில் வைத்து, சபை மூப்பர்கள் மற்றும் சபை அங்கத்தினர்களிடையே வேதாகம வகுப்புகளின் முக்கியத்துவத்தைக் குறித்து ஆவிக்குரிய கூடுகை நடத்தத் தேவன் உதவி செய்தார். வேதாகம வகுப்பிற்கென 100 வேதப்பாடங்களை உள்ளடக்கிய புத்தகம் அச்சிடும் வேலை நல்லமுறையில் நிறைவு பெற்றிருப்பதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகப் பிரச்சனையினால் அவதியுறும் நமது சுதேச ஊழியர் சார்லஸ் மராண்டியின் தந்தை நன்கு குணமடைய; நமது புதிய மிஷனெரிப் பயிற்சியாளர்களுக்கு அங்குள்ள உள்ளூர் மொழியைக் கற்றுக்கொள்ள தேவன் தகுந்த ஞானம் அருள; தன் தாயை இழந்திருக்கும் ஹெலனிற்குத் தேவ ஆறுதல் கிடைக்க; ஆவிக்குரிய வாழ்வைத் தொலைத்து நிற்கும் பாதர்காமா கிராம பத்ராஸ் பஸ்ரா மீண்டும் கிருபையாய் தேவ இரட்சிப்பைப் பெற; எவ்விதத் தடங்கலுமின்றி வரும்நாட்களில் நமது ஊழிய நிகழ்வுகள் அனைத்தும் தேவ மகிமைக்கென நடைபெற ஜெபிப்போம்.

### ஜகன்நாத்பூர்: கணேஷ் & சுமதி; சுரேஷ் மால்தோ, சந்து மராண்டி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவின் மீது தங்களது விசுவாசத்தை வைக்கத் தொடங்கியிருக்கின்றனர். காளையா கிராம புர்பான் போபங்கா நெஞ்சு வலியிலிருந்தும், பெல்மாதியின் மகன் அதிக சுகவீனத்திலிருந்தும் கர்த்தரால் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புக்ரிபார் கிராம ஆலயக்கட்டுமானப்பணி தொய்வின்றி நடைபெற; ரெபெத்லோஹா மற்றும் புருசாய் கிராமங்களில் ஆலயம் கட்டுவதற்கான நிலப் பத்திரங்கள் தயார் செய்யப்பட; குடம்சதா கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பொகந்தா, குஜ்டிஜோடா, மங்காரா, சோசுபி ஆகிய இடங்களிலுள்ள நமது புதிய தொடர்பாளர்கள் ஆராதனைக்குக் கிரமமாக வருவதோடு, இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஹர்தா, படாசா, ஜாவிபேடா ஆகிய கிராமங்களில் சிறிய ஜெபக்குழுக்கள் நடத்தப்பட; சர்தா கிராம சோனாராம் பூர்த்தி, ராம் பூர்த்தி, காதிராம் பூர்த்தி, பிரதான் ஹன்கஹா, அர்ஜுன் ஹன்கஹா, சாக்ரோ ஹன்கஹா, ரோஷ்ணி ஹன்கஹா, மிட்லி ஹன்கஹா ஆகிய நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சிரிசாய், காளி ஆகிய கிராமங்களில் நமது ஊழியத்திற்கு எதிர்ப்புக் காட்டுவோர் யாவரும் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## மார்ச் 18
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. இந்திராம்மா டேனியல் விஜயராஜ்

### நோனிகட்: லெட்கோலுன் பெய்ட் & ஹேட்நெய்கிம்

**துதிக்க:** புதிதாக 11 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பறைசாற்றப் பட்டுள்ளது. புதிதாக 16 நபர்கள் கிறிஸ் தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். தாம்னா ஆலயப்பிரதிஷ்டையைத் தேவன் ஆசீர்வதித்ததோடு, அநேகர் அதில் கலந்துக்கொண்டு தேவ நாமத்தை மகிமைப்படுத்த உதவி செய்தார். மத்காரா பகுதியில் நடந்த தலைவர்கள் பயிற்சிக்கூடுகையையும், அனைத்து திருச்சபைகளிலும் நடந்த அறுவடைப்பண்டிகையையும் தேவன் ஏராளமானவர்களுக்கு ஆசீர்வாதமாக்கிக் கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கத்தன்ஜா பகுதியில் ஆலயம் கட்டத் தகுந்த நிலமொன்று கிடைக்க; நமது விசுவாசி மூக்கையா தம்பதிக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; பல்வேறு மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்துச் சென்று, பலவித வியாதிகளினால் கஷ்டப்படும் நமது விசுவாசிகளின் சுகநலத்திற்காக; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் நமது விசுவாசிகள் முழுவதுமாக அதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

### சிக்காரிபாடா: குமாரவேல் & மரியாள்

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 25 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத் திற்குள் வந்துள்ளனர். மரணப்படுக்கை யில் கிடந்த சுமி ஹஸ்தக்கைத் தேவன் காப்பாற்றினார். மனவளர்ச்சியின்மையில் இருந்து சாஹிப் சோரேனையும், வலிப்பு நோயிலிருந்து ஷிப்லால் மராண்டியையும் கர்த்தர் சுகப்படுத்தினார். நமது விசுவாசி சுரேஷ் முர்முவிற்குக் குழந்தை செல்வத் தைத் தேவன் ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாம்கந்தர் திருச்சபை விசுவாசி களின் ஒற்றுமைக்காக; வேதாகம வகுப்பு மற்றும் சிறிய ஜெபக்குழுக்கள் எல்லாச் சபைகளிலும் தொடங்கப்பட; மனநோயினால் அவதிப்படும் சோகிதோலா கிராம சூரஜ் முர்மு, நத்தன்புரா கிராம ஹோப்னா டுடு, மங்கல் முர்முவின் மகள்கள் மற்றும் சபாமுனி முர்மு பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

### ஜமா & மகரோ விடுதி: வடேகர் திலீப் & கொன்கனி பாரதிபேன்

**துதிக்க:** புதிதாக 15 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். 30 கிராமங்களில் நடந்த பின்தொடர்பணி ஊழியங்களையும், 5 கிராமங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். வயிற்றுப் பிரச்சனையிலிருந்து கோலம் டுடுவைத் தேவன் குணமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சபை மூப்பரான பாபுஜி கிஸ்கு & சுமி முர்முவின் குடும்பம் மழலை செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; பிற மத நம்பிக்கையைத் தழுவியுள்ள ஓஜா மற்றும் பல குருக்களின் கரங்களுக்கு நமது விசுவாசிகளைத் தேவன் விலக்கிக் காக்க ஜெபிப்போம்.

## மார்ச் 19
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரேணுமா சாடங்கி தீப்திலால் மாலி
திருமதி. டெல்ஃபின் கிங்ஸ்லி லிவிங்ஸ்டன்

### ராம்கார்:
### செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** புதிதாக 11 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. புதிதாக 29 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். தாமா பகுதியில் பின்மாற்றமடைந் திருந்த நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சில குடும்பப் பிரச்சனைகளினால் பல மாதங்கள் அடைபட்டிருந்த தோல்கட்டா பகுதி ஆலயம் மீண்டும் ஆராதனைக்குத் திறக்கப்பட்டது. இந்துவா கிராமத்தலைவர் தனது குடும்பத்தினரோடு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்துள்ள அதிசயத்திற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜித்தல பஸ்கி, கோப்னா ஆகிய பகுதிகளில் இருக்கும் சுவிசேஷ எதிர்ப் பாளர்கள் யாவரும் மனந்திரும்ப; பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் கிருபையாய் விசுவாசத்திற்குள் வர; பல தாரத்து திருமணமுறையை இன்னும் பின்பற்றி வரும் நமது விசுவாசிகள் தெளிந்த புத்தியுடன் கிறிஸ்துவில் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### தபன்: ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். 3 பகுதி களைத் தழுவியிருக்கும் 75 கிராமங் களில் வெளிசந்திப்பு ஊழியங்களைச் சிறப்புடன் செய்து முடிக்க தேவன் நமது ஊழியர்களுக்கு உதவி செய்தார். சோனாலி டுடு மற்றும் பிரசாந்தோவைக் கெட்ட கனவுகளிலிருந்தும், சுஜித்தை இனந்தெரியாத சுகவீனத்திலிருந்தும் தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோன்டுல், போல்நாத்பூர், போரம், பீர்பிரி, புரோதன் கங்காராம்பூர் ஆகிய கிராமங்களில் ஆராதனை மையங்கள் அமைக்கப்பட; மனநோயி லிருந்து பிஸ்வாஜித் டுடு மற்றும் அனந்தலால் டுடுவைத் தேவன் குணப்படுத்த; நமது ஊழியத்தைப் பலவிதங்களில் தடைசெய்யும் ரெபேக்கா டுடு, கோமல் முர்மு ஆகியோர் மனந் திரும்ப; விசுவாசிகளின் ஒற்றுமையின்மை யினால் அடிக்கடி தொந்தரவுக்குள்ளாகும் நக்தஹார் கிராம ஆலயக்கட்டுமானப் பணி விரைவில் தடையின்றி நிறைவுப் பெற; அனந்தபூர் மற்றும் பூதக்கோம் கிராமங்களில் வாழும் சந்தால் இன மக்களின் இரட்சிப்பிற்காக; நமது சுதேச ஊழியர்கள், சபை மூப்பர்கள், தன்னார்வ ஊழியர்கள் ஆகியோரின் குடும்பங்களில் தேவ வல்லமை ஊற்றப்படவும், அதனால் சுவிசேஷ ஊழியத்தை அவர்கள் வீறு கொண்டு எழுந்துச் செய்யவும்; சுவி சேஷத்திற்கு வாய்ப்பிருக்கும் சவுதினாஜ்பூர் மாவட்டத்தில் ஒரு சுதேச ஊழியர் பணியமர்த்தப்பட ஜெபிப்போம்.

## மார்ச் 20
சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. டேவிட் பெருமாள், திரு. ஜார்ஜ் சி. ஆர்.
திருமதி. புஸ்பிதா ராணி பெஹரா
திருமதி. ஞான செல்வராணி ஜீவா
திரு. பிமல் சந்திர முர்மு, திரு. சபீர் குமார் சிங்
திரு. சாமுவேல் பெபர்த்தா

### ஜாம்போனி:
**இப்ராயிம் மாலி & புரோசன்சிதா**

**துதிக்க:** பாலியாகுடி, சோட்டா பன்சார், படா பன்சார், பாலஸ் போர்தை, தோமோஹனி, கடோதிஸ், காசியா, பெங்காடியா, சம்போஹா, ராஜ்படா, பொம்சாமி, சோன்திரி, படேலாலி ஆகிய 13 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. சில்டா, பிம்பர் ஆகிய பகுதிகளில் நடந்த வெளிசந்திப்பு கூடுகைகளைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். கர்த்தர் தமது சுவிசேஷ வார்த்தைகளால் நமது சந்தாலி மற்றும் பிற இன மக்கள் யாவரையும் ஒன்றுக்கூடி தேவனை ஆராதிக்கச் செய்த அதிசய நன்மைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழிய வளர்ச்சி மற்றும் அதன் விரிவாக்கத்திற்கு உள்ளூர் சுதேச ஊழியர்களும், தன்னார்வ ஊழியர்களும் புதிதாகக் கிடைக்க; பெனிகடியா கிராம கரம் ஹெம்ரோம், பஞ்சமி கிராம ஹம்ரு சோரேன், ஜமுனாசோலே கிராம கல்பனா மஹோத்தா மற்றும் ஜோர்போசிலா கிராம அஞ்சலி கௌரின் ஆத்ம மீட்பிற்காக; தாகுராம் பஹாரி, ஜிங்காசோலே, ராம் நகர் மற்றும் ரகுநாத்பூர் பகுதிகளில் ஆலய ஆராதனைகளும் வேதாகம வகுப்புக்குழுக்களும் தொடர்ச்சியாக நடத்தப்பட ஜெபிப்போம்.

## அஸோம்

### ஜோனை:
**சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா**

**துதிக்க:** பாலி கிராமத்தின் இரண்டுப் பகுதிகளில் பெரியளவிலான வெளிசந்திப்புக் கூடுகைகள், சிறுவர் முகாம் மற்றும் விசுவாசிகள் முகாம் யாவையும் நன்றாக நடத்தி முடிக்க தேவன் நமது ஊழியர்களுக்கு அநுக்கிரகம் பாராட்டினார். புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்கத் துவங்கியுள்ளனர். சரீர சுகவீனத்திலிருந்து தேவன் மனோஜ் தோலேயைச் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான ராம் மிலி, சந்த்ரோ சிங், ராஜா மற்றும் அஜாத் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையடைய; ஜார்ஜ், பூஜாரி ஹெமோ சோனுவால், அரோஹன்தோ நரோ, தேவராஜ், புட்டுல் ஜோனைகந்தோ ஆகியோரது குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக; நமது புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஜோனை பணித்தளத்தைச் சார்ந்த 374 கிராமங்களிலும் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; நமது உள்ளூர் சுதேச ஊழியர் பிரணாப் கௌதம் உற்சாகமாகத் தேவப்பணியில் ஈடுபாடு கொள்ள ஜெபிப்போம்.

## மார்ச் 21
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா ஹன்ஸ்தக் கிஸ்கு
திருமதி. புரொபிலா பொசுமத்தாரி பிரதீப்
திரு. அமிர்தராஜ் வி.
திரு. கோவிந்தராஜன் @ பெஞ்சமின்
திருமதி. சசிகலா வெங்கடேசன்
திரு. ராஜேந்திரன் ஜே.
திரு. கணேஷ் ஆர்.

# ஒடிசா

## டேங்கானல்:

**வினோத் குமார் & சனம் ஜாய்ஸ்**

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. புதிதாக ஏழு நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். நமது சுதேச ஊழியரின் குடும்பத் தினருக்குத் தேவன் நல்ல சுகமருளி, மீண்டும் அவர்கள் பணித்தளத்திற்கு வந்துச்சேர உதவி செய்தார். கால் பெலவீனங்களிலிருந்து படா கோச் சாயத் மற்றும் தீராத வயிற்றுவலி பிரச்சனையிலிருந்து சாட்டர் கிராம பொலந்தா ஆகியோரைத் தேவன் சுகமாக்கினார். சமய போந்த்ரா கிராம ரகுவாபிலைத் தேவன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் ஆவிக் குரிய எழுச்சி உருவாக; பப்லிசாமி யைக் கழுத்துப் புற்றுநோயிலிருந்தும், இஸ்ரேல் முண்டாவை மனவளர்ச்சி யின்மை கோளாறிலிருந்தும், மொகந்தி குன்கல் கிராம பொலந்தாவைப் பக்கவாதத்திலிருந்தும், போலோ ஹெம்ரோம் கிராம பிராமணியை இருதயக் கோளாறிலிருந்தும் தேவன் சுகமாக்க ஜெபிப்போம்.

## ஜஷிப்பூர்:

**சுகின்லால் & ஜெயராணி**

**துதிக்க:** புதிதாக 20 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 30 நபர்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கத் துவங்கி யுள்ளனர். சரஸ்வதியையும், தாகுரு ஹெம்ரோமையும் தேவன் பக்கவாதத் திலிருந்து சுகமாக்கினார். புதிய விசுவாசி களுக்கான முகாம், பணித்தள சபை கவுன்சில் கூடுகை மற்றும் ஞாயிறுபள்ளி ஆசிரியர்கள் கூடுகை யாவற்றையும் கர்த்தர் ஆசீர்வதித்துக்கொடுத்தார். 20 விடுதிப் பிள்ளைகளும் சுகப் பத்திரமாய் மீண்டும் விடுதி வந்துச் சேர்ந்தமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹோ இன மக்கள் மத்தியில் பெருமளவு எழுப்புதல் உருவாக; குமாரி பில், கடகுருவா, பருதி மற்றும் ஒசுரா கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; சுகவீனத்திலிருந்து லட்சுமி பூர்த்தி, கல்லீரல் பிரச்சனையிலிருந்து சுனை கஹாராய், வலிப்பு நோயிலிருந்து திசிங் பூர்த்தி மற்றும் சுராய் மராண்டி ஆகியோர் சுகம் பெற ஜெபிப்போம்.

## மார்ச் 22
திங்கள்

### கியோன்ஜர்கட்:
**பிரத்யூஷ் நாயக் &**
**மரிதாய் லியோனா**

**துதிக்க:** புதிதாக 11 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 4 நபர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிய விசுவாசிகளின் பயிற்சிக்கூடுகையைக் கர்த்தர் ஆசீர்வதித்ததோடு, புதிய விசுவாசிகளை விசுவாசத்தில் பெலப்படுத்தியும் உள்ளார். தேவகும்சாகி கிராம நகியைத் தேவன் இரத்தப்போக்கிலிருந்தும் கருசிதைவிலிருந்தும் அற்புதமாகப் பாதுகாத்தார். ஒரு ஆலய நிலப்பிரச்சனையினால் உண்டான எதிர்ப்பிலிருந்து தேவன் பாங்ருதி கிராம நமது விசுவாசிகள் 21 பேரை ஆபத்திற்கு விலக்கிக் காத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாலிசாகி கிராம ஆலயக்கட்டுமானப்பணி பிரச்சனையின்றி நடைபெற; சீத்தா முண்டா, தீத் முண்டா ஆகியோரை மனநோயிலிருந்தும், சாந்தி முண்டாவை இரத்தச்சோகை வியாதியிலிருந்தும் கர்த்தர் ஆரோக்கியமாக்க; ஜீத்தன், பாய்ஜன்தி குடும்பம், சோனாமணி ஆகியோரைத் தேவன் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பண்ண ஜெபிப்போம்.

### பல்லகாரா:
**பாசுதேவ் மால்தோ &**
**பசந்தி மால்தோ**

**துதிக்க:** 2 வருட கடின முயற்சியுடன் கூடிய ஜெபத்திற்குப்பின், காக்குடிமா பகுதி திருச்சபையினர் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். 10-ம் & 12-ம் வகுப்பு நமது விடுதி மாணவர்கள் சுகபத்திரமாய் விடுதி வந்துச்சேர்ந்தனர். மமலபோஷி மற்றும் கொண்டனாலி பகுதிகளில் நடைபெற்ற குடும்பப்பயிற்சி வகுப்புகளைத் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். குடிப்பழக்கத்திலிருந்து விடுபட தேவன் கத்யா நாயக்கிற்கு உதவி செய்தார். பயக்குமுட்டியா மற்றும் மமலபோஷி கிராமங்களில் நடக்கும் ஞாயிறு ஆராதனையிலும், புதன்கிழமை தோறும் நடக்கும் உபவாச ஜெபத்திலும் புதிய விசுவாசிகள் தவறாமல் வந்து பங்குப்பெற தேவன் கிருபை பாராட்டுகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரத்தச்சோகையினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஜத்ரா நாயக்கின் மனைவிக்குத் தேவன் அற்புதமான சுகப்பிரசவம் நல்க; நமது விசுவாசிகளான அந்தாரி கிராம தாங்கு குடும்பம் மற்றும் மமலபோஷி பகுதி லுக்சோனா ஜுவாங் குழந்தை செல்வங்களினால் நிறைவாய் ஆசீர்வதிக்கப்பட; ஜுவாங் இனமக்கள் மத்தியில் மாபெரும் நல்லாவிக்குரிய மாற்றம் நிகழ ஜெபிப்போம்.

## மார்ச் 23
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுகாந்தோ குமார் சிங்
செல்வி. நெம்ஸவா

### ராய்ரங்பூர்:

**சாமுவேல் ஜே. & ஹவிலா பரமானந்த்**

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். புர்சு திரியா வைத் தீய ஆவியின் தொந்தரவினால் உண்டான மனநிலை பாதிப்பிலிருந்தும், ஹெசடி சோப்ராமை அவரது காலிலிருந்த பெரிய புண்களிலிருந்தும் தேவன் ஆரோக்கியமடையச் செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சித்தல் முண்டா, ஹதா சந்தில், தாங்ருதாஸ் ஹெம்ரோம், குணா சந்திர டுப்பு, தாமோதர் மசிஹ், ஹெம்பா பூர்த்தி ஆகிய 6 குடும்பங்கள் மற்றும் கணேஷ் பன்ரா, குணாமி மராண்டி ஆகியோர் யாவரும் சுவிசேஷத்தைக் கேட்டிருப்பினும், இரட்சிப்பின் அனுபவத்தையும் பெற்றிட; கோபிநாத்பூர், குவார்தி, பல்ஜீசுவா ஆகிய பகுதிகளில் ஆராதனைக்குழுக்கள் உருவாக்கப்பட; சுவிசேஷ எதிர்ப்பாளரான ஜமுனா ஹெம்ரோமின் சுகவீனத்தில் நமது மிஷனெரிகள் அவருக்காக ஜெபித்த தினால், அவர் இயேசுவைத் தனது இரட்ச கராக ஏற்றுக்கொள்ள; கோபுடி, மகாடி, தாங்கர்ஜோடா ஆகிய பகுதிகளில் நடக்கப் போகும் இயேசு திரைப்பட ஊழியங் களுக்காக; நமது சுதேச ஊழியர்களைப் புதிய இடங்களுக்கு ஊழியத்திற்கென அழைத்துச் செல்லும் இன்னும் விசுவாசி யாகாத லட்சுமன் பூர்த்தியின் இரட்சிப் பிற்காக; பக்கவாதத்திலிருந்து சேரா பூர்த்தி, எலும்பு காசநோயிலிருந்து கார்மி டுடு, சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து நதியாசோரேன் மற்றும் பாண்டு சிர்கா, புற்றுநோயிலிருந்து ஜோதிசிங் மற்றும் ராஜுபோத்ரா, மனநிலை பாதிப்பிலிருந்து குவார் பூர்த்தி ஆகியோரைத் தேவன் முற்றிலுமாகக் குணப்படுத்த ஜெபிப்போம்.

## குஜராத்

### ஃபோக்டி தலைமைத்துவ பயிற்சி மையம் : ரூபன் ரவி & விஜய ராணி

**துதிக்க:** கேர்திபாடா திருச்சபையில் வைத்து நடந்த ஸ்தோத்திர கூடுகையில் 150 விசுவாசிகள் கலந்துக்கொண்டனர். தலைமைத்துவ நிகழ்ச்சிக் கூடுகை களின்போது விசுவாசிகளின் பயன் பாட்டிற்கு ஏதுவாக சமையலறை, குடிநீர், வாகனங்கள் நிறுத்த மற்றும் கழிவறை போன்றவற்றிற்கான பந்தல்கள் போட தேவன் நமது மிஷனெரிகளுக்கு உதவி செய்தார். 10-ம்&12-ம் வகுப்புப் படிக்கும் நமது போக்டி மித்ரா பவன் விடுதி மாணவர்கள் யாவரும் சுகத்துடன் விடுதி வந்துச்சேர தேவன் கிருபை பாராட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளுக்கென அநேக பயிற்சிக்கூடுகைகள் இந்தப் பயிற்சி மைய வளாகத்தில் வைத்து நடத்தப்பட; உள்ளூர் சுதேச ஊழியர்களின் பயிற்சிக்கான "நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பயிற்சியேடுகள்" யாவற்றின் மொழி யாக்கமும் விரைவில் முடிக்கப்பட; வருங்காலங்களில் வேதாகம கல்விப் பயிற்சியில் இணைய அநேக உள்ளூர் சுதேச ஊழியர்கள் முன்வர ஜெபிப்போம்.

## மார்ச் 24
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. மெக்வான் ஃபீபிபேஹன்
திருமதி. நிரோலா டிகல்

### கடோத்:
**ராம்சிங்பாய் வசாவா & ஊர்மிளாபேன்**

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. புதிதாக 6 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். கல்லீரல் தொற்றிலிருந்து கம்லாபூர் கிராம வினோத்பாயையும், கோவிட்-19னிலிருந்து தர்சாதி கிராம கீதாபேனையும் தேவன் சுகப்படுத்தினார். அரவிந்த்பாய், ரியாபேன், ரிஹித் சனா பேன், சாங்குபேன் ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் நமது ஆராதனையில் தவறாமல் கலந்துக்கொள்கின்றனர். நமது ஊழியரின் மகள் ரிங்குவிற்கு நவோதயா மால்தகம் என்ற அரசாங்கப் பள்ளியில் ஆசிரிய வேலை கிடைத்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; உரார்சதி, காந்தலி ஆகிய கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூடுகைகள் தொடங்கப்பட; நமது புதிய தொடர்பாளர்கள் அனைவரும் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றிட ஜெபிப்போம்.

### தனக்லா:
**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** புதிதாக மூடஷா என்ற கிராமத்தில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. கப்ரியா கிராமத்தில் நடந்த வெளிசந்திப்பு நிகழ்ச்சியைத் தேவன் அநேகருக்கு மிகுந்த பயனுள்ளதாக மாற்றித் தந்தார். நமது ஊழியத்தின்போது புதிய ஏற்பாட்டை 15 நபர்களும், முழுவேதாகமத்தை 3 நபர்களும் பெற்றுச் சென்றுள்ளனர். சிர்காம், ஜெர், வாதி ஆகிய கிராமங்களில் நடந்த ஊழியப்பின்தொடர்பணி ஏராள மான மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. அம்பாலா, பிச்சிபுரா ஆகிய கிராமங்களில் நடந்த உபவாச ஜெபக் கூடுகைகளில் அநேகர் பங்குப்பெற கர்த்தர் உதவிப் பாராட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கப்ரியா, ஜெர், சிர்காம், மூடஷா ஆகிய கிராமங்களில் ஆராதனைகள் தொடங்கப்பட; தாலுவி இனமக்கள் மத்தியில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட; அமுந்தலா கிராம நமது விசுவாசி ரேகா பேனுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; குடிப்பழக்கத்திலிருந்து ராமன்பாய், கோமாபாய், அதுல்பாய் ஆகியோர் விடுதலை பெற ஜெபிப்போம்.

### *இராஜஸ்தானிய அன்னாளோ இவர்!*

*இராஜஸ்தான், கேர்வாடா பணித்தளம், காமடி கிராமத்தைச் சேர்ந்த நமது பெண் விசுவாசி காந்திபாய் தாமாருக்கு 7 மகள்கள் இருக்கிறார்கள். ஆனாலும், குறிப்பாக இவர் தனக்கொரு மகன் வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடன் அனுதினமும் கர்த்தரிடம் விண்ணப்பம் செய்து வந்தார். பிற விசுவாசி களையும் இதற்கென ஜெபிக்கும்படி வேண்டினார். கர்த்தர் இப்பெண்ணின் விண்ணப்பத்தைக் கேட்டு, இவருடைய விசுவாசத்தைக் கனப்படுத்தும்பொருட்டு, 8-வது பிள்ளையாக இவருக்கு ஒரு ஆண் மகனைக் கொடுத்தார். இதைக் கண்ட இவரது குடும்ப உறவினர் யாவரும் இக் குடும்பத்தாரோடு சேர்ந்து கர்த்தர் செய்த இவ்வதிசய நன்மைக்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்தினர். அல்லேலூயா!*

## மார்ச் 25
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. லிங்நெய்ஹோய் ஸௌ

### மெஹசானா:
### சம்புநாத் நாயக் & ராஜேஸ்வரி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. பின்மாற்றமடைந்திருந்த நமது விசுவாசி சந்திரிகாபேன் தற்போது மீண்டும் ஆராதனைக்கு வருகிறார். வெளிசந்திப்பு ஊழியத்தில் நமது மிஷனெரிகளோடு இணைந்து தருணும் மஹசேனாவும் ஊழியம் செய்கின்றனர். பலவசபுரா கிராமத்தில் இரவுநேர ஜெபக்கூடுகை தடையின்றி நடைபெற்று வருகிறதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச் சபையில் இணைய ஆயத்தமாகும் சந்தி ரிகாபேனின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சுவிசேஷத்தைக் கேட்டும், தேவ வல்ல மையை அதிசய நன்மைகளாய் அனு பவித்தும் இருக்கின்ற நமது தெப்தான்ஷன் பகுதி மக்கள் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நமது ஆராதனையில் தவறாமல் பங்கேற்று, சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்ற கீதாபேன், தீன்பாய், பிந்துபாயின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

### கான்வேல்: வினு & சுகிமலர்

**துதிக்க:** கோச்சை கிராம லலிதாபேன், பிக்கில்பாய், அன்வீர் பகுதி வச்லாபேன், லீலாபேன், சந்தீப்பாய், தபிலோனா கிராம அஞ்சுபேன், நிலேஷ்பாய், அஞ்சலிபேன் ஆகியோர் சுவிசேஷத்தின் மீது அதிக ஆர்வம் காட்டுகின்றனர். தபிலோனா கிராம சுனில்பாயைத் தேவன் மின்சார அதிர்வின்று பாதுகாத்தார். சுபன்பேனிற்குத் தேவன் குழந்தை பாக்கியம் தந்துள்ளார். மூடுகாம் கிராம யஷோதாபேனைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், கோபால்பாயைக் கால் தோல்வியாதியிலிருந்தும் தேவன் சுகப்படுத்தினார். சுராங்கி பகுதி தினேஷ் பாய் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கி யிருப்பதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உம்மர்வானி கிராம இன்சுபாய் சாராயம் விற்கும் தொழிலை விட்டுவிட்டு மனந்திருந்தி வாழ; 'கொரோனா பரவுகிறது' என்ற வதந்தியைப் புறக்கணித்து, மந்தோணி பகுதி விசுவாசிகள் நமது ஆராதனைகளில் மீண்டும் சமாதானத் துடன் பங்குப்பெற; பின்மாற்றமடைந் திருக்கும் நமது உம்மர்வானி கிராம விசுவாசி ஜூருபாய் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; மனநிலை கோளாறினால் கஷ்டப்படும் வசினா கண்ணுபாய் மற்றும் சிறுநீரகக்கல் உபாதையினால் அவதிப்படும் அஜித்பாய் சுகம் பெற ஜெபிப்போம்.

## மார்ச் 26
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜேக்கப் ஞானப்பண்டிதன்

திருமதி. மரிய செல்வி தர்மராஜ்

### சில்வாசா :
**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ரூர்பாடா பகுதியில் புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 3 வருடங்களாகச் செய்த ஜெபத்தின் வாயிலாக நடக்க முடியாமல் இருந்த வரோலி கிராம நமது விசுவாசியின் மகன் சிறுவன் திலீப்பாய் தற்போது நடக்க ஆரம்பித்துள்ளான். பெரும் இயலாமை பெலவீனத்திலிருந்து தேவன் ஓஜார் கிராம உமேஷ்பாயைச் சுகப்படுத்தினார். சயாலி கிராம ரசிலாபேனிற்குத் தேவன் மழலை பாக்கியம் ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வயிற்றுப் புற்றுநோயிலிருந்து கிர்ஜிபேன், மனநோயிலிருந்து கணேஷ் பாய், பக்கவாதத்திலிருந்து மெருபேன் மற்றும் சவ்ஜிபாய் பூரண சுகம் பெற; தங்களுடைய சொந்த பிரயாசத்தில் தங்களுக்கென ஆலயம் கட்ட ஓஜார் பகுதி விசுவாசிகளுக்குத் தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா
### நர்மதா, மொல்கி & வத்ஃபாலி:
**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடைக்கலம் புகுந்துள்ளனர். சாரி, ஓல்பாடா, மொக பாடா, தேல் ஆகிய பகுதிகளில் நடந்த பெண்கள் கூடுகைகளைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். பார்கந்த் கிராமத்தில் வைத்து நடத்திய வாலிபர் ஊழியப்பயிற்சிக் கூடுகையில் 15 வாலிபர்கள் கலந்துக்கொண்டு, தங்களைப் பரிசுத்தமாய் வாழ கிறிஸ்துவிற்குள் அர்ப்பணித்துள்ளனர். கத்ரி கிராம ரேவ்கிபாயைத் தேவன் தீராத நெஞ்சு வலியிலிருந்து சுகமாக்கினார். சத்யா மகாராஜ் சுவிசேஷத்தின் மீது நாட்டம் காட்டுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினால் தலையில் ஏற்பட்டிருக்கும் காயத்திலிருந்து தொர்கா பாடா கிராம விலாஸ் அற்புத சுகம் பெற; தனது வீட்டில் ஜெபக்கூடுகையை நடத்துவதினால் எதிர்ப்பைச் சந்திக்கும் தெபொ தோதாவிற்காக; வரும்நாட்களில் நடக்கவுள்ள வெளிசந்திப்பு நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதங்களுக்காக; கிறிஸ்துவில் மென்மேலும் வளர நமது சுதேச ஊழியர்கள் வேதவாசிப்பின் மேன்மையைக் குறித்து மேலும் நன்கு அறிந்துக்கொண்டு செயல்பட ஜெபிப்போம்.

## மார்ச் 27
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மூர்த்தி டி.

### வடாலி & டொண்டாய்ச்சே:
**பித்யுத் குமார் சிங்**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. கொடிதான வயிற்றுப் பிரச்சனையிலிருந்து மம்தாவைத் தேவன் குணமாக்கினார். புலம்பெயர்ந்துள்ள விசுவாசிகளுக்கென கௌத்தியில் ஆராதனை மையமொன்று தொடங்கப்பட்டுள்ளது. நமது விசுவாசி அனில் ஜலாம் தாதாவிற்கு ஏற்ற வாழ்க்கைத்துணையைத் தேவன் ஈந்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி சஞ்சு தாதாவிற்குச் சொந்தமாக வீடு கட்ட அரசாங்க நிதியுதவி கிடைக்க; அதிக முதுகு வலியினால் அவதிப்படும் கல் தொழிலாளியான ராஜு தாதாவிற்கு நல்ல சுகம் கிடைக்க; திருமணமாகப் போகும் பினோத் தாதா, தனது அனைத்து தீய பழக்கங்களிலிருந்தும் விடுதலை பெற; தனது பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் அலையும் 12 வயது பிரகாஷ் மனம் மாறி, நன்கு கல்வி கற்க; நமது விசுவாசி ஜலாம் தாதாவின் திருமணத்திற்கான பணத்தேவைகள் யாவும் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

### ஜிம்மலாகட்டா ( சிரோன்சா):
**ஸ்ரீனிவாஸ் லாசரஸ் & சுனிதா**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 27 கிராமங்களில் நடந்த பின்தொடர்பணி ஊழியத்தின் மூலம் அதிகமானோர் தங்கள் அர்ப்பணிப்பைக் கிறிஸ்துவில் மீண்டும் புதுப்பித்துக் கொள்ளவும், ஆவியில் பெலப்படவும் தேவன் உதவி செய்தார். சிக்கியாலா கிராமத்தில் வைத்து நடைபெற்ற வெளிசந்திப்பு நிகழ்ச்சியில் மக்களின் வரவேற்பு சுவிசேஷத்திற்கு அதிகம் கிடைத்துள்ளது. உமனூர் கிராமத்திலிருந்து 2 குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு அதிக ஆர்வம் தெரிவிக்கின்றனர். தச்சிலிபிட்டா கிராம பெந்தம்மா கௌரியை மலேரியாவிலிருந்தும், கொண்ட்கர்லா கிராம மரியம்மாவை மூட்டு வலியிலிருந்தும் தேவன் குணமாக்கினார். 5 கிராமங்களில் நடந்த தனித்தாள் ஊழியம் மூலம் நல்ல பலன் கிடைத்துள்ளது. மீராபள்ளி பகுதியில் நடக்கும் நமது ஆராதனைக்கு சுரேஷ் துர்கமின் குடும்பம் தவறாமல் வந்து பங்குப்பெறுகிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது ஆவல் காட்டும் ஷாதா கிராம திலீப் மாதவி, சின்னக்கா, கனிதா, மௌனிகா, கார்கா ஆகியோரது குடும்ப மக்களின் இரட்சிப்பிற்காக; வேதாகம வகுப்பு நடத்தும் தலைவர்களுக்கான பயிற்சிகளைத் தேவன் ஆசீர்வதித்துத் தர; நமது விசுவாசி பெந்தம்மாவின் நிலத்தை அபகரிக்க நினைக்கும் மக்கள் மனந்திருந்த; நமது புதிய தொடர்பாளர்களான கிஷ்தையா, மந்தனையா கௌரி, சந்திரையா கொடப்பி மற்றும் ராமசந்திரா இரட்சிப்பின் அனுபவம் பெற; கோண்ட், மன்யா கோயா, மடியா, நேதகானி ஆகிய மக்களினங்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுச்சி உருவாக; மீராபள்ளி, சீராபள்ளி, எரகடா, பெர்காபட்டி, தர்ஷாவாடா, தச்சிலிபிட்டா ஆகிய கிராமங்களிலுள்ள திருச்சபைகள் யாவும் விசுவாசத்தில் உறுதிப்பட; மெரிகுடம், அம்பிஜாரா, வேணுகம்பந்தா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## மார்ச் 28
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜெரினா ஷிம்ரா

### முக்காடா:
**நாகராஜன் & திலகவதி**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் அன்பின் வாசனையை நுகரத் துவங்கியுள்ளனர். சில நாட்களாகவே காணாமல் போயிருந்த தங்களது மாடுகளை அம்பச்சபாடா மற்றும் வக்கரிச்சபாடா கிராம நமது விசுவாசிகள் திரும்ப கிடைக்கப்பெற்றனர். வனவாசி கிராம கேசவனுடைய கால்களில் கல் விழுந்ததால் உண்டான காயம் சுகமாகியது. விசுவாசிகள் பிரயாணப்பட்டுப் போய்க்கொண்டிருந்த 4 சக்கர வண்டி பள்ளத்தில் விழப்போகும் சூழ்நிலையில் அதை விழாமல் தேவன் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலம்பாடா கிராம மீனா, போசிரா கிராம கல்பனா ஆகியோரைக் கழுத்துக் கட்டிகளிலிருந்தும், தண்டுவேல் கிராம கீதாவை வெள்ளை தொழுநோயிலிருந்தும் தேவன் சுகமடையச் செய்ய; நமது சபை மூப்பர் சுரேஷின் தாயார் காந்தாபேனைத் தேவன் அவரது மரணப்படுக்கையிலிருந்து எழும்பப் பண்ண; ராம் & ஜெயசீலியின் குடும்ப வாழ்வில் தேவ சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

## கர்நாடகா
### கோலார்:
**சாமுவேல் பெபர்தா**

**துதிக்க:** தீய ஆவியின் பிடியினால் கஷ்டப்பட்ட பெல்பாரி கிராம பத்மாவதிக்குத் தேவன் விடுதலை கொடுத்தார். சத்திரகொடள்ளி கிராம அகிதாவைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், அரலி கிராம லட்சுமிதேவியம்மாவைச் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகப்படுத்தினார். 39 கிராமங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களைத் தேவன் எவ்வித எதிர்ப்புமின்றி நடத்தி முடிக்கக் கிருபை செய்தார். சீப்பூர் கிராம நமது விசுவாசி ஜெயலட்சுமியம்மாவிற்கு தனது நிலப்பிரச்சனையில் சுமூகமான நீதி மன்றத் தீர்ப்பு கிடைக்கக் கர்த்தர் உதவி செய்தார். வேமகல் பணித்தளத்தில் ஓர் ஆலயம் தேவநாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொழுநோயிலிருந்து தல் கொண்டா கிராம ஜெயராமப்பாவிற்கு அற்புத சுகம் கிடைக்க; நீதிமன்ற வழக்கு ஒன்றில் இருந்துகொண்டு, சுவிசேஷத்திற்கு செவிமடுக்கத் துவங்கியிருக்கும் சீப்பூர் கிராம பிரசாந்த் இரட்சிக்கப்பட; நமது விசுவாசிகள் குடிப்பழக்கத்திலிருந்து முழுவதுமாக வெளிவர; சுவிசேஷப்பிரதிகளைப் பெற்றிருப்போரும், சுவிசேஷத்தைத் தங்களது செவிகளால் கேட்டிருப்போரும் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## மார்ச் 29
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிஸ் ரஞ்சித் ஜேம்ஸ்
திரு. ஜாண் ஆன்ட்ரூஸ் சுகிர்தராஜ்
செல்வி. ஏஞ்சல் இ.

### கௌரிபித்தனூர்:
**ஃப்ரான்சிஸ் துரைசாமி & ஜெயந்தி**

**துதிக்க:** 10 கிராமங்களில் முதன் முறையாக இயேசுவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளார். 20 கிராமங் களிலுள்ள மக்கள் சுவிசேஷப்பிரதி களைப் பெறவும், நற்செய்தியைக் கேட்கவும் செய்துள்ளனர். ராஜேஷ் & மார்த்தா தம்பதியினருக்குத் தேவன் குழந்தை பாக்கியம் நல்கினார். பின்மாற்றமடைந்திருந்த நமது விசுவாசி லட்சுமியம்மா மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கி, நமது ஆராதனையில் தவறாமல் கலந்துக்கொள்கின்றார். எடகுர் பகுதியைச் சார்ந்த நமது விசுவாசி நஞ்சம்மா தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பகர தொடங்கினதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஞ்சாயத்து தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ள நமது விசுவாசி மூடாலத்தி கிறிஸ்துவில் அதிகம் பலப்பட; அடிக்கடி பெலவீனப் படும் நமது விசுவாசி ராமக்காவுடைய ஆட்டின் சுகத்திற்காக; சிவப்பா & கங்கம் மாவின் குடும்பத்தில் தேவ சமாதானம் பிறக்க; நமது இளம் விசுவாசிகளான நாகேந்திரா, அஜய், பிரபு, ஜேம்ஸ், தன்ராஜ், ராஜேஷ், சாம்சேகர், அனிதா, சாபல் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசிகள் ராமகிருஷ்ணப்பா, கங்கப்பா, நரசிம்ம ரெட்டி ஆகியோர் கிரமமாக ஞாயிறு ஆலய ஆராதனையில் பங்குப்பெற ஜெபிப்போம்.

### ஷிறஹட்டி:
**ஆஷாபிரப்தா பால் &**
**தீனாகுமாரி பெபர்தா**

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் விதைக்கப் பட்டுள்ளன. நமது விசுவாசி அனிதா விற்கு ஜெபத்தின் மூலம் அரசாங்க உத்தியோகம் கிடைத்துள்ளது. நமது 2 பெண் விசுவாசிகளுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணைகளைக் கர்த்தர் கட்டளையிட்டார். அதிக முதுகு வலியி லிருந்து சசிகலாவையும், கடும் வயிற்றுப் பிரச்சனையிலிருந்து சம்புவையும் தேவன் சுகமாக்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது வீட்டைக் கட்டும் போது, பக்கத்து வீட்டாரால் சில பிரச்சனைகளை எதிர்கொள்ளும் நமது புதிய தொடர்பாளர் பர்மப்பாவிற்காக; நமது விசுவாசி ரேகாவிற்கு மகப்பேறு அறுவை சிகிட்சையின்போது உண்டான சில உடல் கோளாறுகளிலிருந்து அவர் முற்றிலுமாகக் குணமடைய; நமது விசுவாசிகளான மஜூலா, பாக்கியா ஆகியோருக்குக் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; நெஞ்சுவலி யிலிருந்து ஹேமந்திற்கு முழுசுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## மார்ச் 30
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கொன்கனி சம்பத்பாய்

திருமதி. ஷெட்ரிமயூம் பிரியா தேவி ஜீவர் ஜோஸ்வா

### கஜேந்திரகடா:
**மஞ்யா நாயக் & ரத்னா**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி எடுத்துரைக் கப்பட்டுள்ளது. 4 கிராமங்களில் நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். குடியினால் கல்லீரல் பாதிக்கப் பட்டிருந்த நிங்கப்பாவை ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அன்னக்கா & எல்லப்பாவின் மகளுடைய திருமணத்திற்கான பணத் தேவைகள் யாவும் சந்திக்கப்பட; நமது விசுவாசி வசந்தின் கடன் பிரச்சனை தீர; நமது விசுவாசி சுப்பம்மாவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### குப்பம்:
**பால் குப்புசாமி & சைலா**

**துதிக்க:** பந்தபள்ளியில் வைத்து நடைபெற்ற ஆத்துமஆதாயப் பயிற்சிக் கூடுகை, குட்லனாயணபள்ளியில் வைத்து நடைபெற்ற விசுவாசிகளின் குடும்பக்கூடுகை, குப்பம் பகுதியில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகை யாவற்றையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். குட்லனாயணபள்ளி கிராமத்தில் நடைபெறும் ஆலய ஆராதனையில் 5 குடும்பங்கள் பங்குப்பெறுகின்றனர். நமது விசுவாசி பவித்ராவிற்குத் தேவன் நல்கின சுகப்பிரசவத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரப்போகும் நாட்களில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் சபை மூப்பர் கள் பயிற்சிக்கூடுகை; வெளிசந்திப்பு ஊழியம், முழுஇரவு ஜெபம், லெந்து கால சிறப்பு உபவாச ஜெபம் யாவும் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய; நமது ஆராதனையில் கிரம மாகப் பங்குப்பெறும் ராஜசேகர், ஷில்பா, கலாவதி, கமலா, சௌபாக்யா, பவித்ரா, சென்னப்பா, அம்மை யம்மா, சாவித்திரியம்மா, ராமக்கா, கோவிந்தராஜ் ஆகியோரது குடும்பத் தினரின் இரட்சிப்பிற்காக; சந்திராயன் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; இப்பணித்தளத்திலுள்ள 10 திருச் சபைகளிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்படுவதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட; நமது விசுவாசிகளான அனிதா, பாலாஜி, கலாவதி, சௌபாக்யா ஆகியோருக்கு மழலை செல்வங்கள் கிடைக்க; பக்கவாதத்திலிருந்து ரங்கீலா வும், தலைப்புண்களிலிருந்து பிரபா கரும் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

## மார்ச் 31

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அமிர்தா கோல்டா ஆசீர்

திரு. ஜாண் எசுங்

திருமதி. தோதி குரம்வாரி ஹிமா பிந்து ரமேஷ்

### பலமநேர்:

**சத்தியப்பா & ஷியாமளாபாய்**

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவிற்குள் வந்துள்ளனர். படுகுந்தபள்ளி, தாதாபள்ளி, கிருஷ்ணாபுரம், சுந்தர்பாளையம், நாகா பள்ளி ஆகிய இடங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. தன்னார்வ ஊழியர்களான தேவன்ராஜ், லாசரஸ், டேவிட், கணேஷ், ஜான்சன் ஆகியோர் வெளிசந்திப்பு ஊழியங்களில் உற்சாகமாக ஈடுபடுகின்றனர். அதிக மான ஜெபத்திற்குப்பின், நமது வாலிப விசுவாசி கணேஷிற்கு ஒரு அரசாங்க வேலை கிடைத்துள்ளது. தல்லாபள்ளி, சம்பர்பூர், பைரதிபள்ளி, குப்பம், கலக் கடா, தேவலபள்ளி ஆகிய திருச்சபை களில் விசுவாசிகளின் பங்களிப்பால் கண்காணிப்பு கேமராவின் தேவைகள் சந்திக்கப்பட்டன. நமது புதிய தொடர் பாளர்களான தரணி ராவனையாகரி பள்ளி திருச்சபையிலும், ரங்கம்மா தாமல செருவு திருச்சபையிலும், மற்றும் பிறர் கொடுகுசிந்தா திருச்சபையிலும் ஆராதனையில் தவறாது பங்குப்பெற தேவன் காட்டும் கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசாங்க கட்டளையின்படி, இன்னும் கண்காணிப்பு கேமரா பொருத் தப்பட வேண்டிய 24 திருச்சபைகளுக் காக; சமிதி அங்கத்தினர்களும், ஆலய மூப்பர்களும் விசுவாசத்தில் பெலப்பட்டு, எல்லாச் சூழ்நிலையிலும் தங்களது திருச்சபைகளைக் கிறிஸ்துவுக்குள் பாதுகாத்திட; ராமகுப்பம் கிராம ராஜேஷ் வரியைப் புற்றுநோயிலிருந்தும், குண்டூர் கிராம மனிஷாவைச் சிறுநீரகப் பிரச்சனை யிலிருந்தும் தேவன் குணமாக்க; அம்மா கிராம நமது விசுவாசி கமலாவின் நிலப்பிரச்சனைக்கு நல்ல தீர்வு கிடைக்க; ஜுவான்பள்ளி கிராம பிரகாஷிற்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்க; ராமகுப்பம் கிராம நமது விசுவாசி பழனிக்குக் குழந்தை செல்வம் கிடைக்க ஜெபிப்போம்.

### தர்மாவரம்:

**தேபதத்தா லிமா & சோனியா ராணி**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷ தீபம் ஏற்றப்பட்டுள்ளது. பெரிய விபத்தி னின்று தேவன் சந்திராவைப் பாதுகாத்தார். கொடபட்டா பகுதியில் நடத்திய புதிய விசுவாசிகளுக்கான கூடுகையையும், தேடுவோர் முகாமையும், 9 கிராமங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களையும் மற்றும் இந்திராக்கா காலனியில் வைத்து நடைபெற்ற ஆலய மூப்பர்கள் கூடுகை யையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்த தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஸ்ரீனிவாஸ், சுனிதா, கார்த்திக், மல்லிகார்ஜுனா, பாரதி ஆகியோருடைய இரட்சிப்பிற்காக; சரீர உபாதைகளினால் சரியாகப் படிக்க இயலாமல் தவிக்கும் பல்லவிக்கு நல்ல சுகம் கிடைக்க; நமது விசுவாசிகளின் பிள்ளைகளான கௌதமி, பீமாபிந்து, வேணுசரண், சந்திரா, மோனிகா, ஹேமலதா ஆகியோருக்குத் தேவன் நல்ல கல்வியறிவைத் தர ஜெபிப்போம்.

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icic**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A095 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***